மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர்

இயற்றிய

திருக்குற்றாலச் சிலேடை வெண்பா

(குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

கலைமகள் வெளியீடு - கரு

உ

கணபதி துணை

மேலகரம்

திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய

திருக்குற்றாலச் சிலேடை வெண்பா

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம்

மயிலாப்பூர்

1940

 [விலை 5 அணா

உ

கணபதி துணை

முகவுரை

தமிழில் பிரபந்தங்களின் இலக்கணத்தை வரையறுத்துக்கூறும் நூல்களுக்குப் பாட்டியல் என்னும் பெயர் வழங்கிவருகின்றது. இப்போதுள்ள பாட்டியல்களுள் பழமையாகக் கருதப்படுவது 'பன்னிரு பாட்டியல்' என்பதாகும். அதன் பின்னர் அவ்வப்போது எழுந்த பாட்டியல் நூல்கள் பல. அவற்றில் இலக்கணம் கூறப் பெறும் பிரபந்தங்கள் எல்லாவற்றிற்கும் இலக்கியம் இப்போது கிடைப்பது அரிது. அந்நூல்களிற் சொல்லப்படாத பல புதிய பிரபந்தங்களும் நாளடைவில் புலவர்களால் இயற்றப்பெற்றன. தூது என்னும் பிரபந்த வகைக்குப் பன்னிரு பாட்டியலைப்போன்ற பழைய பாட்டியல்களில் இலக்கணம் சொல்லப்படவில்லை. பின்னர் இயற்றப்பெற்ற இலக்கண விளக்கப் பாட்டியலினும் பிரபந்தத் திரட்டென்னும் பாட்டியல்நூலினும் அதன் இலக்கணத்தைக் காணலாம். ஆதலின் முந்தைய பாட்டியல்களுக்குப் பின் புதியனவாகத் தூதுநூல்கள் எழுந்தனவென்றும் அவ்விலக்கியம் கண்டு பிற்காலத்தினர் இலக்கணம் அமைத்தனரென்றும் கருத நேர்கின்றது.

இவ்வாறு புதியனவாகத் தோற்றிய பிரபந்த வகைகளுள் சிலேடை வெண்பாவும் ஒன்று. இவ்வகைப் பிரபந்தங்கள் சிலேடை யமைதியாலும் வெண்பாயாப்பாலும் இப் பெயர் பெற்றன. இவை மாலையென்னும் பிரபந்த வகையில் அடங்கும்; அன்றி ஊர் வெண்பா என்னும் வகையிலும் அடக்கிக் கூறலாம்.

அஷ்டப் பிரபந்தங்களுள் சிலேடைகளமைந்த பிரபந்தமாகிய திருவேங்கட மாலையின் பெயரும்,

> "சீலமறை யோர்வாழ் திருக்கழுக்குன் றத்துவெண்பா
> மாலையொரு நூறு மகிழ்ந்துரைக்க"

என்ற திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பாச் செய்யுளும், "குற்றால மா மாலைக்கு" என்ற இந்நூற் செய்யுளும் இவ்வகைப் பிரபந்தங்களை மாலையென்று வழங்கும் மரபை உணர்த்துகின்றன.

என் ஆசிரியராகிய திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறைச் சிலேடை வெண்பா என்ற நூலொன்றை இயற்றத் தொடங்கினார்கள். அது முற்றுப் பெறவில்லை.* அதன் முதற் பாட்டின் முதல் இரண்டு அடிகள்,

"சீர்வெண்பா மாலைத் திருவா வடுதுறையார்க்
கூர்வெண்பா மாலை யுரைப்பவே"

என்பன. இச் செய்யுட் பகுதியில் 'ஊர்வெண்பா மாலை' என்று சிலேடை வெண்பாவைக் குறித்திருத்தல் அறிதற்குரியது.

கலைசைச் சிலேடை வெண்பா, சிங்கைச் சிலேடை வெண்பா, திருநீர்மலைச் சிலேடை வெண்பா, திருமழிசைச் சிலேடை வெண்பா, புலியூர்ச் சிலேடை வெண்பா, திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா எனப் பல சிலேடை வெண்பாக்கள் தமிழில் உண்டு.

சிலேடை வெண்பாக்களில் ஊரின் பெயரை இரண்டாமடி மூன்றாஞ் சீரில் வைத்து முன் இரண்டடிகளிற் சிலேடையையும் பின் இரண்டடிகளில் திரிபையேனும் மடக்கையேனும் அமைப்பது புலவர் மரபு. சில பிரபந்தங்களில் முதல் ஐம்பது பாடல்கள் சிலேடையின்றியும் பின் ஐம்பது சிலேடையுடனும் அமைந்திருக்கும்.

தென்பாண்டிநாட்டிற் சிறப்புற்று விளங்கும் திருக்குற்றாலத்தின் பெருமையையும் திருக்குற்றால நாதரின் திருவருட்சிறப்பு முதலியவற்றையும் பாராட்டும் திருக்குற்றாலச் சிலேடை வெண்பாவென்னும் இந்நூல், பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் முதலிலும் விளங்கிய மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயரென்னும் புலவர் திலகரால் இயற்றப் பெற்றது. திருக்கோயிற்கொத்தில்† ஒருவராகிய அக்கவிராயர் இத்தல விஷயமாகப் பதினான்கு பிரபந்தங்களும் ஒரு புராணமும் பாடியிருக்கின்றனர். அவற்றுள் புகழ்பெற்று விளங்குவன குறவஞ்சியும் புராணமுமேயாம்.

குற்றாலத் தலத்திற்கு இந்நூலாசிரியர் இயற்றிய நூல்களையன்றி இரண்டு கோவைகளும் ஓர் அந்தாதியும் ஒரு கலம்பகமும்

---

* ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், இரண்டாம் பாகம். பக்கம் உஅஅ.

† திருக்கோயிற் பணி புரிவோர்.

வேறு ஒரு சிலேடை வெண்பாவும் பிற பிரபந்தங்கள் சிலவும் உண்டென்று இப்போது தெரியவருகின்றது. அவ்வந்தாதி பிச்சைப் பிள்ளை யென்பவரால் இயற்றப்பெற்றது;

"மன்னன் கிளுவையிற் சின்னணைஞ் சேந்திரன்
வடகரை வீட்டுக்கு மந்திரி யாகவும்
செங்கெல் மருதூர்க்கு நாயக மாகவும்
தென்காசி யூருக்குத் தாயக மாகவும்
தன்னை வளர்க்கின்ற குற்றால நாதர்
தலத்தை வளர்க்கின்ற தானிக னாகவும்
நன்னகர்க் குற்றாலத் தந்தாதி சொன்னவன்
நல்லோர் தொழும்பிச்சைப் பிள்ளை"

என்று இந்நூலாசிரியர் அவரைத் திருக்குற்றாலக் குறவஞ்சியிற் பாராட்டி யிருக்கின்றார்.

கலம்பகம் செங்கோட்டைக் கவிராச பண்டாரத்தால் இயற்றப் பெற்றது. அதனைப் பல வருஷங்களுக்குமுன் நான் திருநெல்வேலியை அடுத்த ஊர்களில் ஏடு தேடச் சென்றபொழுது கலைக்காட்டில் சாமிநாத தேசிகரென்பவர் வீட்டில் கண்டேன். மறுமுறை அங்கே சென்று பார்த்தபோது அப்பிரதியைக் காணவில்லை. தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இயற்றிய சித்திரசபைத் திருவிருத்தம் என்ற பிரபந்தம் இத்தலத்துக்குரியதே.

இத்தலத்திற்குரிய மற்றொரு சிலேடை வெண்பாவின் பெயர் 'நன்னகர்ச் சிலேடை வேண்பா' என்பது.

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடம் நான் பாடம் கேட்டு வந்த காலத்தில் இந்தச் சிலேடை வெண்பாவின் பிரதி ஒன்று அவர்களுக்குக் கிடைத்தது. அதனை அவர்கள் ஆராய்ந்து பாடம் சொன்னார்கள். இந்நூலாசிரியரின் பரம்பரையினரும் திருவாவடுதுறை யாதீனத் தலைவர்களாக விளங்கிய ஸ்ரீ மேலகரம் சுப்பிரமணிய தேசிகருக்குப் பூர்வாசிரமத்தில் இளவலுமாகிய சண்பகக் குற்றாலக் கவிராயரென்பவர் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்டுக் கொண்டிருந்தார். பிள்ளையவர்கள் காலத்திற்குப் பின் அவர் தம் வீட்டிலிருந்து மேற்கூறிய பதினான்கு பிரபந்தங்களும் தனித் தனியே எழுதியிருந்த ஏட்டுப் பிரதிகளைக் கொணர்ந்தார். அவை பிழை பல உடையனவாக இருந்தன. நானும் அவரும் சேர்ந்து அவற்றை ஆராய்ந்து பொருள்வரையறை செய்து கடிதத்தில் சுத்தப் பிரதி ஒன்று பண்ணி வைத்துக்கொண்டோம்.

தில்லைவிடங்கன் வெண்பாப்புலி வேலுச்சாமி பிள்ளை யென்பவர் அந்தப் பிரதியைச் செய்து கொடுத்தார். அந்தப் பிரதி சண்பகக் குற்ருலக் கவிராயரிடம் இருந்தது. அவர் காலத்திற்குப் பின் அது திருநெல்வேலி ஹிந்து காலேஜில் தமிழாசிரியராக இருந்த ஸ்ரீ மே. சொ. சுப்பிரமணிய கவிராயரிடம் இருந்து அப்பால் கடையம் ஸ்ரீ கே. எஸ். வைத்தியலிங்கம்பிள்ளை யவர்களிடம் சென்றதாகக் கேள்வியுற்றேன். இப்போது அது சென்றவிடமே தெரியவில்லை.

நானும் சண்பகக் குற்ருலக் கவிராயரும் அப்பிரபந்தங்களை ஆராய்ந்தபோது இந்தச் சிலேடை வெண்பாவையும் யமக அந்தாதியையும் பிரதி செய்வித்து வைத்துக் கொண்டேன். எனக்காக அப்பிரதியை லிகிதம் செய்துதந்தவர் தென்காசி முத்துக்குமாரசாமி பிள்ளையென்னும் அன்பர். சிலகாலத்திற்குப் பின் ஓர் இடத்தில் எனக்கு இத்தலத்து உலாவின் பிரதி கிடைத்தது.

இந்நூல் காப்புமுதல் அவையடக்கம் இறுதியாக உள்ள ஐந்து வெண்பாக்களோடு 105 வெண்பாக்களையுடையது. 10, 20, 30, 40, 50, 60, 70, 80, 90-ஆம் செய்யுட்களில் சிலேடை இல்லை.

இதன்கண் இத்தலத்தின் சிறப்புக்களும் பிறதலப் பெயர்களும் செய்திகளும் நாயன்மார் பெருமையும் அங்கங்கே காணப்படும். ஆசிரியர் தாம் கோயிற் கொத்தைச் சார்ந்தவரென்பதை அவையடக்கத்தில் "கொத்தடியேன் புன்சொல்" என்பதனுற் குறிப்பித்தார்.

இத் தலத்தின் பெருமைகள் பல நூல்களில் விரிவாக உள்ளன; அவற்றுள் இப் பிரபந்தத்தில் வந்த செய்திகள் வருமாறு:

திருக்குற்ருலம் அமைந்த நாடு தென்னுரிய நாடென வழங்கிவந்தது; "சுவர்க்கநா டும்பணிதென் னுரியநாட் டத்தன்" (7.)

இங்குள்ள மலை மூன்று சிகரங்களை உடையது (84); அதனுல் திரிகூடாசலமென்னும் திருநாமத்தைப் பெற்றது (74.) இத்தலத்திற்கு நன்னகரென்பது ஒரு பெயர் (காப்பு. 3.) இத் தலத்தைச் சார்ந்த பூஞ்சோலைக்குச் சண்பகாரணியமென்று பெயர் வழங்கும்

(35, 40, 88.) இங்குள்ள வடவருவியும் (10, 30, 47, 50, 60, 69, 80, 81, 86), தேனருவியென்னும் சிவமது கங்கையும் (26, 35, 40, 59, 66, 83) சிறப்புடையவை. வடவருவியில் மூழ்கினாரது பாவம் கழுநீராகப் பிரிந்து ஓடுமென்பது இத்தல ஐதிஹ்யம் (47.) இத் தலத்தின் திருக்கோயிலுக்குச் சங்கக் கோயிலென்ற பெயர் வழங்கும் (14.) சிவபெருமான் இங்கே குறும்பலாமரத்தினடியி லும் எழுந்தருளியிருக்கின்றார் (62, 70, 90.) இங்கே எழுந்தருளி யுள்ள அம்பிகையின் திருநாமம் குழல்வாய்மொழி என்பது (46, 49.) ஐவகைச் சபைகளுள் ஒன்றாகிய சித்திர சபை (17) இங்கே அமைந்துள்ளது. இக் கோயிலில் மும்முரச மண்டப மென்ற ஒன்றுண்டு (71.) சிவபெருமான் இங்கே பிரமதேவ ராகவும் திருமாலாகவும் இருந்து விளங்கினர் (காப்பு: 1; நூல்: 11, 42, 58, 66, 73); அகத்தியர் வழிபட்டுப் பேறு பெற்றார் (31, 79, 94.)

இப் பிரபந்தத்துள் இடையிடையே திருவண்ணாமலை, திருவா டானை, திருவாரூர், திருவாலங்காடு, திருவானைக்கா, இராமேசுவரம், கயிலை, காசி, காஞ்சிபுரம், திருக்காளத்தி, கூடலையாற்றூர், கேதாரம், கோகருணம், சாய்க்காடு, சிதம்பரம், திருத்தூங்கானைமாடம், திரு நெல்வேலி, திருப்பரங்குன்றம், திருப்பாசூர், புத்தூர், திருப்பூ வணம், மதுரை, திருமறைக்காடு, திருவாய்மூர், திருவெண்காடு முதலிய தலங்கள் சொல்லப்படுகின்றன. அமர்நீதி நாயனர், ஆனய நாயனர், கண்ணப்ப நாயனர், காரைக்காலம்மையார், சண்டீசர், சாக்கிய நாயனர், சிறுத்தொண்டநாயனர், சுந்தரமூர்த்தி நாயனர், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், மானக்கஞ்சாற நாயனர், மூர்த்தி நாயனர் என்போர் பெருமைகள் பாராட்டப்படு கின்றன.

39-ஆம் பாடலில் ஐம்பொருட் சிலேடை வந்தது. மூன்று செய்யுட்களில் (10, 27, 92) முன் இரண்டடிகளில் யமகமும், ஆறு செய்யுட்களில் (9, 25, 31, 38, 82, 86) பின் இரண்டடி களில் யமகமும், நான்கு செய்யுட்களில் (6, 44, 66, 97) பின் இரண்டடிகளில் மடக்கும் அமைந்துள்ளன.

செக்கச் சிவந்திருப்பார் (22) என்னும் உலகவழக்கை இதிற் காணலாம். இளைத்தலென்னும் பொருளில் சடைத்தல் (8) என் னும் சொல்லும், மாடியென்னும் பொருளில் மேடை (25) என்னும் சொல்லும் வந்தன; இவை தென்பாண்டி நாட்டு வழக்கு.

திருக்குற்றால நாதர் திருவருளால் இப்போது குறிப்புரையுடன் இப்பிரபந்தம் வெளியிடப்பெற்றது. இதனைக் 'கலைமகள்' பத்திரிகையில் வெளியிட்டுதவிய ஸ்ரீமான ரா. நாராயணசாமி ஐயரவர்களுக்கும் இதனை ஆராயும்போதும் வெளியிடும்போதும் உதவிபுரிந்த அன்பர்களுக்கும் எனது நன்றி உரியதாகும்.

'தியாகராஜ விலாசம்'
14—6—40.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

உ

கணபதி துணை

திருக்குற்றாலச் சிலேடைவெண்பா

காப்பு

விநாயகர்

1. சொன்னத்தா லத்துதிக்கைத் தும்பிமுகத் தாற்றுதிக்கை
கன்னத்தா லத்துதிக்கை காட்டுமே—முன்னயனைப்
பொற்றால மாமாலைப் போலிருந்தா ராலிருந்தார்
குற்றால மாமாலைக் கு.

(குறிப்புரை)

1. சொன்னம் தாலம் துதிக்கை - பொன்னாலாகிய பனைமரம் போன்ற துதிக்கையையுடைய; யானைத்துதிக்கைக்குப் பனைமரம் உவமை; "பனைக்கை மும்மத வேழ முரித்தவன்" (தே.) தும்பி முகத்தான் துதிக்கை - யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளைத் துதித்தலானது. கல் ந தாலத்து உதிக்கை காட்டும் - கற்றற்குரிய சிறப்பையுடைய நாவினிடத்தே செய்யுட்கள் தோன்றுதலைச் செய்விக்கும்; ந - சிறப்புப்பொருள் தருவதோ ரிடைச்சொல். முன் - பண்டைக்காலத்தில். அயனை பொன் தாலம் மா மாலை போலிருந்தார் - பிரமதேவரையும், பொன்னிறத்தையுடைய பூமிதேவிக்கும் திருமகளுக்கும் நாயகராகிய திருமாலையும் போல வீற்றிருந்தவர்; பொன் திருமகள், மா பெருமை எனலும் ஆம். தாலம் - பூமி. வீற்றிருந்தாரும் ஆலிருந்தாரும் ஆகிய சிவபிரான்மீது அடியேனாற் செய்யப்படும் குற்றாலச் சிலேடைவெண்பாவென்னும் பாமாலை நிறைவேறுதற் பொருட்டு; ஆலிருந்தாரென்றது தக்ஷிணாமூர்த்தியை.

(முடிபு.) தும்பிமுகத்தானைத் துதிக்கையானது குற்றாலமாமாலைக்குத் தாலத்து உதிக்கையைக் காட்டுமென இயைக்க.

இத்தலத்தில் சிவபிரான் அயன், திருமால், உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளாகப் பண்டைக்காலத்தில் முறையே எழுந்தருளினாரென்பது புராண வரலாறு. இதனைத் திருக்குற்றாலப் புராணத்தாலும், பிறநூல்களாலும் அறியலாகும்; "மாலயனாய், மோனைக்கா லத்திருந்தான்" (11) என்பர் பின்.

A

முருகக்கடவுள்

2. நற்றுல வெண்பாவை நாயகற்கு நாயகர்மேற்
குற்றுல வெண்பாவைக் கூறவே—பொற்றுனை
வேலா யுதத்தொருவன் மிக்ககொடி வாகனமாம்
காலா.யுதத்தொருவன் காப்பு.

கலைமகள், அகத்திய முனிவர்

3. நன்னுதலி னேர்பாகர் நன்னகர்க்குற் றுலவெண்பாப்
பன்னுதலி னேர்பாகம் பாலிப்ப—முன்னுதலி
வெண்கமலத் தாளை வியந்தேத்திக் கும்பமுனி
வண்கமலத் தாளைநினை வாம்.

சமயகுரவர்

4. பாவுக் கரசுசண்பைப் பாலறு வாயருண்டு
நாவுக் கரசாரூர் நம்பியுண்டு—கோவுக்குக்
கோவைசொன னுண்டுநெஞ்சே குற்றுல மென்றமரப்
பாவைசொன னுஞ்சொலுமே பாட்டு.

---

2. நல் தாலம் வெண்பாவை நாயகற்கு - நல்ல நாவில் எழுந்தருளிய வெண்மையான திருமேனியையுடைய பாவைபோன்ற கலைமகளுடைய நாயகராகிய பிரமதேவருக்கு. நாயகர்மேல் - தலைவராகிய சிவபிரான்மீது. பொன் தானை - பொன்னுடையை அணிந்த. வேலாயுதத்து ஒருவன் - முருகக் கடவுள். கொடி வாகனமாம் காலாயுதத்து ஒருவன் - காலாயுதத்தைக் கொடியாகவும், ஒருவை வாகனமாகவும் உடையவர்; நிரனிறை; காலாயுதம் - கோழி; ஒரு - ஆடு; "ஒருத்திக்கொருவன் பகையோ" (பழம் பாடல்); இச்சொல் தொருவெனவும் துருவெனவும் துருவையெனவும் வழங்கும்.

3. நன்னகரென்பது திருக்குற்றுலத்தின் திருநாமங்களுள் ஒன்று. பன்னுதலின் - சொல்லும் திறத்தில். ஓர் பாகம் - செய்யுளுக்குரிய பல பாகங்களுள் யாவரும் உணர்தற்குரிய ஒரு பாகத்தை; ஓர்தல் - உணர்தல்; பாகம் - செய்யுளுக்குரிய நடை; அவை க்ஷீரபாகம், திராக்ஷாபாகம், ஆம்ர பாகம் முதலிய பலவாம். பாலிப்ப - அருளுதற்கு. முன் நுதலி - முதலில் கருதி. வெண்கமலத்தாளை - கலைமகளை. கும்பமுனி - அகத்தியமுனிவரது. வண் கமலத் தாளை - வளவிய தாமரைமலர் போன்ற திருவடியை.

(முடிபு.) பாலித்தற்கு நுதலி எத்தி நினைவாம் என்க.

4. பாவுக்கு அரசாகிய பாலறுவாயர் - திருஞான சம்பந்தர்; சண்பை - சீகாழி. ஆரூர் நம்பி - சுந்தரமூர்த்தி நாயனர். கோவுக்கு - சிவபெருமானுக்கு. கோவை - திருச்சிற்றம்பலக்கோவையாரென்னும் பிரபந்தத்தை. சொன்னன் - திருவாதவூரடிகள்.

அவையடக்கம்

5. கிள்ளைமொழிக் கொச்சை கிளிவளர்த்தோர் தாமிகழார்
பிள்ளைமழ லைக்கிகழார் பெற்றெடுத்தோர்—வள்ளைக்
குழைபாகர் குற்றாலர் கொத்தடியேன் புன்சொல்
விழைவாகக் கொண்டருள்வார் மேல்.

நூல்

1. பூமேவு தென்சாரற் புல்லளைந்துங் கல்லளைந்தும்
கோமே தகமேயுங் குற்றாலம்—மாமேருச்
சிங்கா சநத்தினன் செய்யகுழைத் துய்யமதிச்
சங்கா சநத்தினன் சார்பு.

2. போது மலர்வாவிப் புள்ளினமுந் தெள்ளியரும்
கோது மலங்களையுங் குற்றாலம்—மோதுதிரைக்
காளத்துக் கந்தரத்தார் கஞ்சன்மா றேடுமண்ட
கோளத்துக் கந்தரத்தார் குன்று.

---

5. கிள்ளை - கிளியினது. கொச்சை - பிழைபட்டமொழியை. மழலைக்கு - மழலைச்சொற்களை; உருபுமயக்கம். வள்ளைக்குழை - வள்ளைக்கொடிபோன்ற காதினையுடைய உமாதேவியார்; அன்மொழித்தொகை. கொத்து அடியேன் - திருக்கோயிற் பணிவிடைசெய்வோருள் ஒருவனாகிய அடியேனது; கொத்து - இங்கே கோயிற் பரிகாரத்தொகுதி; "எட்டுக்கொத் தான விளையாநா யக்கர்களும்" (காளத்திநாதருலா, 197.)

1. புல் அளைந்து - புற்களைக் கலந்து. கோ மேதக மேயும் - பசுக்கள் மேன்மை பொருந்த மேயாநிற்றற் கிடமாகிய. கல் அளைந்து - கற்களோடு கலந்து. கோமேதகம் ஏயும் - கோமேதகமென்னும் மணி பொருந்தும். மேரு மலையாகிய சிங்காசனத்தையுடையவர்; மேருமலைபோன்ற சிங்காசனமெனலு மாம். செய்ய குழை - செவ்விய குண்டலத்தை. மதிசங்காசம் நத்தினர் - சந்திரனை ஒத்த சங்கமாக உடையவர்; சிவபிரான் சங்கைக்காதணியாக உடையவரென்றபடி; சங்காசம் - ஒப்பு; நத்து - சங்கு.

2. புள் இனம் கோதும் மலங்கு அளையும் - பறவைக்கூட்டங்கள் கோதுகின்ற மலங்கென்னும் மீனை உண்பதற்குக் கலக்கும். தெள்ளியர் கோது மலம் களையும் - தெளிந்த அறிவினையுடையோர் முக்குற்றங்களையும் ஆணவம் முதலிய மலங்களையும் களைகின்ற. மோதுதிரை - கடலிற் றோன்றிய. காளத்துக் கந்தரத்தார் - விடம் தங்கிய திருக்கழுத்தையுடையவர்; நீலகண்டரென்றபடி. கஞ்சன் - பிரமதேவர். அண்டகோளத்துக்கு அந்தரத்தார் - அண்டகோளத்துக்கும் மேற்பட்டவர்.

3. விம்பத்தா னைத்தறுகண் வேடுவரும் பாவலரும்
கும்பத்தா னைக்கடுக்குங் குற்றலம்—சம்பத்தாம்
ஞானநாட் டம்படைத்தார் நன்முடிமேற் பாம்புவிட்டு
வானநாட் டம்படைத்தார் வாழ்வு.

4. வம்பார் வனமயிலு மாரு வருவிருந்தும்
கொம்பார் நடந்தழைக்குங் குற்றலம்—நம்பார்
புரங்கடந்த வீரத்தார் போர்க்கனலுள் மூவர்க்
குரங்கடந்த வீரத்தா ளூர்.

---

3. விம்பம் - அழகு; தானை - சேனை. வேடுவர் கும்பத்து ஆனைக்கு அடுக்கும் - வேடர்கள் கும்பங்களையுடைய யானையோடு போர்செய்தற்குப் பொருந்தும்; கும்பம் - மத்தகம். பாவலர் - புலவர். கும்பத்தானைக் கடுக்கும் - குடத்திலே தோன்றிய அகத்தியமுனிவரை ஒக்கும். ஞானமாகிய நாட்டத்தை அடியாருக்கு உண்டாக்கியவர்; நாட்டம் - கண். வானநாட்டு அம்பு அடைத்தார் - கங்கையின் நீரை அடைத்தாரது. ஆற்று வெள்ளத்தை அடைத்தற்கு வைக்கோலால், நீளமாகவும் பருமையுள்ளதாகவும் செய்யப் படும் புரியைப் பாம்பென்பர்; "கிட்டுவார்பரி நிறுத்துவாரா வுருட்டுவார்" (திருவிளை. மண்சுமந்த. 5), "பிறையொழுக வொழுகுபுனற் கங்கை யாற்றின் பேரணையிற் றொடுத்துவிட்ட பெரும்பாம் பென்னக், கறை யொழுகும் படவரவம் படரும் வேணி" (குமர. 336) என்பவை இங்கே ஒப்பிடற்குரியன.

4. வம்பு - புதுமை. மயில் கொம்பு ஆர் நடம் தழைக்கும் - மயில் மரக்கொம்பில் இலக்கணம் நிறைந்த கூத்தை மிகச்செய்யும். பூங்கொம்பு போன்றமகளிர் விருந்தினரை நடந்து அழைக்கும்; கொம்பார் - மகளிர். நம்பார் - பகைவரது. புரம் கடந்த வீரத்தார் - முப்புரங்களையும் வென்ற வீரமுடையவர். போர்க்கனலுள் - போராலுண்டாகிய நெருப்பில். மூவர்க்கு - தலைவர்களான மூன்று அசுரர்களுக்கு. உரங்கள் தந்த ஈரத்தார் - அழியாத வன்மையை அளித்த இரக்கமுடையவர்.

"மூவெ யில்செற்ற ஞான்றுய்ந்த மூவர்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
ஒருவ னீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமு ழாமுழக் கவ்வருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே."

(தே. சுந்தர.)

5. தாபதர்கள் சிந்தைக்குந் தார்க்குழலார் செவ்வாய்க்கும்
கோப முருக்கறுக்குங் குற்றாலம்—மாபதும
வேந்துதலை யோட்டினார் வெண்ணீற்றான் மாறனுடற்
காந்துதலை யோட்டினார் காப்பு.

6. மாட்டணுகு வார்க்கு மணிவெயிலாற் பூமகட்கும்
கோட்ட மிரவடையாக் குற்றாலம்—சூட்டகலாத்
தார்பணியு மென்பணியார் தாள்பணியு மென்பணியார்
மார்பணியு மென்பணியார் வாழ்வு.

7. பூவைமார் பொன்முலைக்கும் பொன்முலைசே ராடவர்க்கும்
கோவைவாய் முத்தமிடுங் குற்றாலம்—தேய்வுமதி
சூரியநாட் டத்தன் சுவர்க்கநா டும்பணிதென்
னாரியநாட் டத்த னகம்.

---

5. தாபதர்கள் - முனிவர். சிந்தைக்கு - சிந்தையில். கோபம் முருக்கு அறுக்கும் - கோபம் தம்மை யழித்தலை அழிக்கின்ற; கோபத்தை இலதாகச் செய்புமென்பது கருத்து. செவ்வாய்க்கு கோபம் உரு கறுக்கும் - சிவந்த வாயின் நிறத்துக்கு இந்திரகோபத்தின் நிறம் கறுத்துத் தோன்றும்; செவ்வாய் மிக்க சிவப்பாக இருக்குமென்றபடி. பதுமவேந்து - பிரமனது; தலையோட்டினார் - கபாலத்தையுடையவர். மாறன் - கூன்பாண்டியனது. உடல் காந்துதலை - உடலானது சுரநோயாற் காந்துதலை. ஓட்டினார் - நீக்கினவர். திருஞானசம்பந்தர் ஓட்டுதற்குச் சிவபெருமான் ஏதுகருத்தாவாதல்பற்றி இங்ஙனம் கூறினார்.

6. மாட்டு அணுகுவார்க்கு - தன் பக்கத்தே சேர்பவர்க்கு. கோட்டம் இரவு அடையா - அழுக்காறும் இரத்தற்றொழிலும் அடையாத. மணி வெயிலால் - மாணிக்கத்தின் சிவந்த ஒளியால். பூமகட்கு - திருமகட்கு. கோட்டம் - கோயிலாகிய தாமரைப்பூ. இரவு அடையா - இரவில் இதழ் குவிதலைச் செய்யாத; மணியினொளியை வெயிலென்று எண்ணித் தாமரை மலர் இரவிலும் குவிந்திலது. சூட்டு - தலைச்சூட்டும். அகலா தார் - நீங்காத மார்பின் மாலையும். பணியும் - ஆபரணங்களும். மென்பணியார் - மெல்லிய பாம்பாக உடையவர்; பணி - பாம்பு. என் பணியார் - அடியேன் பணி விடையை ஏற்றுக்கொண்டவர். மார்பில் அணியும்; என்பு அணியார் - எலும்பாகிய ஆபரணத்தையுடையவர்.

7. பூவைமார்: இரண்டு தொழிற்குமுரிய எழுவாய். பொன்முலைக்கு கோவை வாய் முத்தம் இடும் - சுணங்குகளையுடைய நகில்களுக்குக் கோத்தல் வாய்ந்த முத்துமாலையை அணிகின்ற. ஆடவர்க்கு கோவை வாய் முத்த மிடும் - கணவர்களுக்குக் கோவைப்பழத்தைப்போன்ற வாய்முத்தம் கொடுக்கும். மதி சூரிய நாட்டத்தன் - சந்திரனையும் சூரியனையும் கண்களாகவுடையவர்; தேய்வு, மதிக்கு அடை. குற்றாலமுள்ள நாடு தென்னாரிய நாடென்று வழங்கப்பெறும்; "அண்ணலார் நன்னகர்த்தென் னாரியநாட் டணிபுகழ்தல்" (திருக்குற்றலப். திருநாட்டுச். 52.)

8. பங்கயஞ்சேர் வண்டும் பரிமளஞ்செய் பாவையரும்
கொங்கை முகந்திமிருங் குற்ருலம்—கங்கையுறை
ஆடகமா டச்சடையா ரம்பிகைதா ளம்பிடிக்க
நாடகமா டச்சடையார் நாடு.

9. ஆடலளி யுஞ்சுரும்பு மானைகளா டுஞ்சுரும்பும்
கூட மதுவருந்துங் குற்ருலம்—நீடசல
வஞ்சிக்கு மாலானர் மாதவரை மோகினியாய்
வஞ்சிக்கு மாலானர் வாழ்வு.

10. கோளரியாஞ் சென்மவினைக் கோட்டானை மேற்பாயும்
கோளரியாந் தெள்ளருவிக் குற்ருலம்—கோளரியும்
அம்புலியுங் கண்ணின ராடியகூத் தாடரவும்
செம்புலியுங் கண்ணினர் சேர்வு.

---

8. வண்டு: கொங்கை - தேனை அல்லது மகரந்தப்பொடியை, முகந்து - மொண்டு கொண்டு, இமிரும் - ஒலிக்கும். பரிமளம் செய்பாவையர் - வாசனையையுடைய கலவைச்சாந்தைச் செய்யும் மகளிர்; பரிமளம்: ஆகுபெயர். கொங்கை முகம் திமிரும் - நகிலினிடத்தே அச்சாந்தைப் பூசிக் கொள்ளும். ஆடக மாடம் சடையார் - பொன்மாடம்போன்ற சடையை யுடையவர்; சடை பொன்னிறமுடையது. நாடகம் ஆடச் சடையார் - திரு நடனம் புரிந்தருளச் சலியாதவர்; சடைதல் - சலித்தல்; "கொடுக்கச் சடை வற்ற வுன்னையும் பாடி" (திருக்குற்றலமாலை.)

9. அளியும் சுரும்பும் மதுவை உடனிருந்து உண்ணும்; அளியும் சுரும் பும் வண்டின் சாதிவகைகள். ஆனைகள் ஆடும் சுரும்பு - யானைகள் விளை யாடும் மலை. கூடமது வருந்தும் - சிகரம் வருந்துகின்ற; அது: பகுதிப் பொருள் விகுதி; ஆனைகள் விளையாடுதலினுல் சிகரங்கள் வருந்தின. அசல வஞ்சிக்கு - உமாதேவியாரிடத்தில்; அசலம் - மலை. மாலானர் - விருப்பம் உடையவரானர். மாதவரை வஞ்சிக்கும் - தாருகாவனத்து முனிவர்களை வஞ்சித்த. மால் ஆனர் - திருமாலாகிய இடபத்தை உடையவர்.

10. இச்செய்யுளிற் சிலேடை இல்லை. கோள் அரியாம் - குற்றம் பொருந்திய பகையாகிய. சென்மவினைக் கோட்டு ஆனை மேல் - பிறவிக்குக் காரணமான வினையாகிய கொம்பையுடைய யானையின்மேல்; கோடு: யானைக்கு அடை. கோளரி ஆம் - சிங்கமாகும்; சிங்கம் வெண்ணிறமுடைய தாதலின் வடவருவி சிங்கமாக உருவகம் செய்யப்பட்டது. கோள் அரியும் அம்புலியும் - கோளாகிய சூரியனையும் சந்திரனையும். கண்ணினர் - திருவிழி களாக உடையவர். ஆடரவும் செம்புலியும் - பதஞ்சலி முனிவர் வியாக்கிர பாதரென்னும் இருவராலும். கண்ணினர் - கருதப்பட்டவர்.

11. வேலன் வெறிக்களத்தும் வேடர் தினைப்புனத்தும்
கோல முழவிசைக்குங் குற்றுலம்—மாலயனைய்
மோனைக்கா லத்திருந்தான் முன்வேட னெச்சிலிட்ட
ஊனைக்கா லத்திருந்தா னூர்.

12. மிக்குத் தடங்களினு மென்சாலி வேலியினும்
கொக்குப் பலவனஞ்சூழ் குற்றுலம்—திக்குத்
திகந்தபரி வட்டத்தார் தென்னவன்முன் வீதி
உகந்தபரி வட்டத்தா ரூர்.

13. தாக்குஞ் சிலையுஞ் சமர்வேட்ட குஞ்சரமும்
கோக்குஞ் சரமழைக்குங் குற்றுலம்—தேக்குகடல்
ஆலமுண்ட கத்தனா ராறுதா ரங்கடந்த
மேலமுண்ட கத்தனர் வீடு.

---

11. வெறிக்களத்து - வெறியாடும் இடத்தில். வேலன் கோலம் முழவு இசைக்கும் - பூசாரி அழகிய முழவென்னும் வாத்தியத்தை ஒலிக்கும். தினைப்புனத்தில்: கோலம் உழ விசைக்கும் - பன்றிகள் உழும்பொருட்டு வேகங்கொள்ளும். மால் அயனைய் - திருமாலும் பிரமதேவருமாகி. மோனைக் காலத்து - பண்டைக்காலத்தில். வேடன் - கண்ணப்ப நாயனர். எச்சில் இட்ட ஊனைக் கால - எச்சிலாக இட்ட இறைச்சியை உமிழ்தற்கு, திருந் தான் - உடன்படாதவர்; விருப்பத்தோடு உண்டவரென்றபடி.

12. தடங்களில் - தடாகங்களில், கொக்கு பல அனம் சூழ் - கொக் கும் பல அன்னப்பறவைகளும் சூழ்ந்த. சாலிவேலியில் - நெற்பயிரின் வேலி யில், கொக்கு பல வனம் சூழ் - மாமரங்களின் தொகுதியும் பலாமரங்களின் தொகுதியும் சூழ்ந்துள்ள; வனம் - தொகுதி; வனமென்பதைக் கொக்கென் பதற்குங் கூட்டுக. திக்கும் திகந்தமுமாகிய பரிவட்டத்தையுடையவர்; திகந்தம் - திக்கின் முடிவு; பரிவட்டம் - ஆடை; திகம்பரரென்றபடி. வீதி - மதுரைவீதியில். பரிவட்டத்தார் - வேதமாகிய குதிரையை வட்டமாகச் செலுத்தியவர்; வட்டம் - குதிரையின் நடைவகைகளுள் ஒன்று.

13. சிலை - வில், கோக்கும் சரம் மழைக்கும் - நாணிற் கோக்கப்படும் அம்புகளை மழைபோலச் சொரியும். குஞ்சரம் கோ குஞ்சரம் அழைக்கும் - யானை தலைமையான வேறு யானையைப் போர் செய்வதற்கு அழைக்கும். கடலிற் பிறந்த ஆலத்தையுண்ட. கத்தனர் - கர்த்தனர். ஆறு ஆதாரம் கடந்த - மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களையும் கடந்த. மேல முண்ட கத்தனர் - மேலேயுள்ள ஆயிரம் இதழையுடைய தாமரைப்பூவில் எழுந்தருளி யிருப்பவர்.

14. பாக நதித்தடமும் பாமாதும் பூமாதும்
கோக நகத்துறைவார் குற்ருலம்—மாகநகச்
சங்கச் சிநகரத்தார் சங்கரிகொங் கைக்குறிசேர்
நங்கச் சிநகரத்தார் நாடு.

15. மாணிழையார் செவ்வாயும் வண்சிலைதேர் வேடுவரும்
கோணிலவை நாணேற்றுங் குற்ருலம் —வேணிவரி
வண்டாடும் பாடலத்தன் வானவனு மீனவனும்
கொண்டாடும் பாடலத்தன் குன்று.

16. மெய்ப்பாய சீர்கேட்கும் விண்ணேர் புயமுநெஞ்சும்
குப்பாய முந்துதிருக் குற்ருலம்—வைப்பாய
முத்திக் கரும்பினுர் முத்தமிழ்த்தே ஞகவந்தென்
உத்திக் கரும்பினு ரூர்.

---

14. பாகம் - பக்கத்துள்ள, நதித்தடம் - நதியின் இடங்கள், கோகநகம் துறை வார் - சிறந்த பொன்னைக் கொழிக்கும் துறைகள் நீண்டிருக்கப் பெற்ற. மாதுகள் இருவரும்: கோகநகத்தில் உறைதல் ஆர்ந்த; கோகநகம் - தாமரைப்பூ. மாக நகம் - ஆகாயத்தை அளாவிய மலையைப்போன்ற. சங்கச் சிநகரத்தார் - சங்கக்கோயிலையுடையவர்; சிநகரம் - கோயில்; இத்தலத்தி லுள்ள வீதி சங்கவீதியென்றும் கோயில் சங்கக்கோயிலென்றும் வழங்கும்; "சங்கவீதிபொற்கந்தரம்", "தலங்களழி யினுமழியாச் சங்கக் கோயில், எயிலாக விருப்பதனுற் பூலோக கயிலாய மிதுவே யன்ருே" (திருக்குற்றலப். தலமகிமைச். 12, 27.) சங்கரி - உமாதேவியார். நம் கச்சி நகரத்தையுடை யார். நகிற்குறி பெற்ற தலம் காஞ்சி.

15. மகளிர் செவ்வாயானது கோணிய இலவம்பூவிற்கு நாணத்தை யேற்றும். வேடுவர் பிறையை வில்லாக நினைந்து கைக்கொண்டு நாணேற் றும்; கோள் நிலவு - கோளாகிய சந்திரன். வேணி - சடையில். பாடலம் - பாதிரிப்பூ. வானவன் - சேரன். மீனவன் - பாண்டியன். அவ்விருவரும் முறையே கொண்டாடிய பாடல்கள் "மதிமலி புரிசை மாடக் கூடல்" என் னும் திருமுகப்பாசுரமும், "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் செய்யுளு மாகும். அத்தன் - தலைவன்.

16. மெய்ப்பு ஆய - மெய்ம்மையாகிய. சீர் - இத்தலத்தின் புகழை. புயம் குப்பாயத்தைத் தள்ளும்; குப்பாயம் - சட்டையை; உந்து - தள்ளு கின்ற. பூரிப்பினுல் வளர்ந்து புயங்கள் சட்டையைத் தள்ளின. நெஞ்சு - அவர் மனமானது, கு பாய முந்து - இத்தலத்தைத் தரிசித்தற்காகப் பூமியில் பாய்வதற்கு முற்படும்; "அவ்வுல கத்தோ ரிழிவதற் கருத்தி புரிகின்ற தயோத்திமா நகரம்" (கம்ப. நகரப். 10.) முத்தியாகிய நிலத்தே உள்ள கரும் பைப்போன்றவர்; "வரனென்னும் வைப்பு" (குறள்) என்றதுபோல 'வைப் பாய முத்தி' என்ருர். என் உத்திக்கு அரும்பினுர் - என் அறிவின்கண் தோன்றியவர்.

17. வெஞ்சாவிற் கானவரும் வெம்பிடியைப் பின்பிடித்த
குஞ்சரமுஞ் சேவகஞ்சேர் குற்றலம்—அஞ்சாங்கிற்
சித்திரமா மன்றரியார் செங்கணரி யார்க்கரியார்
குத்திரமா மன்றரியார் குன்று.

18. நெட்டசலஞ் சாரிடமு நீர்வேட்ட குஞ்சரமும்
கொட்டமிடு மஞ்சளுறுங் குற்றலம்—கட்டனலோன்
அஞ்சக் கரங்களைந்தா ரஞ்சடக்கி னர்கருத்தில்
விஞ்சக் கரங்களைந்தார் வீடு.

19. மாபுரத்து நாரியர்க்கு மாமேருப் பொன்னுக்கும்
கோபுரப்பொன் னாணிநிற்குங் குற்றலம்—நூபுரப்பொற்
பூந்திருப்ப தாம்புயத்தார் பூதரமெட் டுங்குழுமிச்
சேந்திருப்ப தாம்புயத்தார் சேர்பு.

---

17. வெவ்விய சரத்தையும் வில்லையுமுடைய; கானவர் சேவகம் சேர் - வேடர்கள் வீரத்தைப் பெற்றிருக்கின்ற. பிடி - பெண்யானை, குஞ்சரம் சேவகம் சேர் - ஆண்யானை துயிலுமிடத்தின்கட் சேர்கின்ற. சேவகம் - வீரம், யானைகள் துயிலுமிடம். அஞ்சு அரங்கில் - ஐந்து சபை களுள்; "ஐவகை மன்றுதொ ரூடிய வள்ளல்" (கந்த. கடவுள். 16.) ஐவகைச் சபைகள் இவையென்பது 25-ஆம் பாடலால் அறியப்படும். சித்திரமாம் மன்று அரியார் - சித்திர சபையில் ஆடுகின்ற சோதியாக வுள்ளவர்; அரி - சோதி; இத்தலத்திலுள்ள சபை சித்திரசபையெனப்படும். மற்ற நான்கு சபைகள் 25-ஆம் செய்யுளிற் கூறப்படும். அரியார்க்கு அரியார் - திருமாலுக்கு எட்டாதவர். குத்திரம் மாமன் - வஞ்சனையையுடைய மாமனாகிய தக்கனுக்கு. அரியார் - பகைவர்.

18. நெடுமையாகிய மலையைச் சார்ந்த இடங்களில் கொட்டமும் மஞ்சளும் உறும்; கொட்டம் - ஒருவகை வாசனைப்பூடு; "கொட்டமே கமழுங் கொள்ளம் பூதூர்" (தே.) குஞ்சரமானது கொட்டமிடும் மஞ்சை அள்ளுறும்; கொட்டம் - விளையாட்டு; மஞ்சு - மேகம். கட்டு அனலோன் - வலியையுடைய அக்கினிதேவன். அனலோன் அஞ்சும்படி அவன் கையை வெட்டியவர்; "வெய்யவ னங்கி விழுங்கத் திரட்டிய, கையைத் தறித்தா னென் றுந்தீபற" (திருவாசகம்.) அஞ்சு - ஐம்பொறிகளை. விஞ்சுகின்ற அக்கரங்கள் ஐந்து: பஞ்சாக்ஷரம்.

19. மா புரத்து - பெரிய இந்நகரத்துள்ள; நாரியர்க்கு - பெண்களுக்கு; கோ புரம் பொன் நாணி நிற்கும் - திருமாலின் திருமேனியிலுள்ள திருமகள் நாணி நிற்கும்; கோ - தலைவன்; புரம் - உடம்பு. மேருவிலுள்ள பொன் னுக்கு இத்தலத்துக் கோபுரத்துள்ள பொன் ஆணிப்பொன்னாக நிற்கும். நூபுரம் - காலணி. பதாம்புயம் - திருவடித்தாமரை. பூதரம் எட்டும் -

20. மேலவிட பக்கொடிமேல் விண்ணிடபம் வந்தேறிக்
கோலவிட பக்கொடியாங் குற்ருலம்—ஆலவிடப்
பந்தனைம றுத்தழைத்தார் பத்தா றுத் தூக்கறிசெய்
மைந்தனைம றுத்தழைத்தார் வாழ்வு.

21. ஆடுபா காயசித்த ரல்லாருங் கல்லாரும்
கூடுமறு கூடடையாக் குற்ருலம்—நீடுதிசை
அம்பாவி சேடத்தா ராலால முன்ணவுண்ணும்
உம்பாவி சேடத்தா ரூர்.

22. கண்டலுக்குப் பூவுங் கமழ்துளிக்குச் சாதகமும்
கொண்டல் வரத்துதிக்குங் குற்ருலம்—அண்டலரைப்
புக்கச் சிவந்திருப்பார் பொற்பவளக் குன்றம்போற்
செக்கச் சிவந்திருப்பார் சேர்வு.

மலேகளெட்டும். குழுமி - கூடி. சேர்ந்து இருப்பதாம் புயத்தார் - தங்கியிருப்பதைப் போன்ற எட்டுத் தோள்களையுடையவர்; சேத்தல் - தங்குதல். எட்டுத்தோள்கள்: "போர்கொண்ட வெண்டோட் பொலங்குவடு" (குமர. 2.)

20. இச்செய்யுளிற் சிலேடை இல்லை. மேல விடபம் கொடிமேல் - மேலேயுள்ள மரக்கிளையிற் படர்ந்த பூங்கொடியின் மேலே. விண் இடபம் - இடபராசி. இடபக்கொடி - ரிஷபக்கொடி. ஆலவிடம் பந்தனை மறு தழைத்தார் - திருப்பாற்கடலிற்ருேன்றிய நஞ்சைப் பந்தித்த கருமை தழைப்புற்றவர். பத்தர் - சிறுத்தொண்ட நாயனர். மறுத்து - மீட்டும். வாழ்வு - வாழும் இடம்.

21. பரகாய சித்தரல்லார் கூடுகின்ற மறுகூட்டை அடையாத; மறு கூடு - வேறு உடம்பை; பரகாயப்பிரவேசம் பண்ணுத என்றபடி. கல்லாதார், பலரும் கூடுகின்ற மறுகினிடத்தே அடையாத; மறுகு - வீதி; கல்லாதாரை இத்தலத்தின் வீதியிற் காண்டல் அருமை என்றபடி. திசையாகிய அம்பரவிசேடத்தை உடையவர்; அம்பரம் - ஆடை. உம்பர் அவி - தேவர் இறக்கும். சேடத்தார் - மிச்சமாகவுள்ளவர்; அமுதத்தை உண்ட தேவர் இறப்பவும், தாம் இறவாதவர் என்றபடி; "சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச் சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவா மூவாச், சிங்கமே" (தே. திருநா.)

22. கண்டலுக்கு - தாழைக்கு. கொண்டல் வரத்து பூ உதிக்கும் - கீழ் காற்றின் வரவால் பூ உண்டாகும்; "தாழை காற்றடிக்கப் பூத்த கதைபோல" என்பர். சாதகப்பறவை: கொண்டல் வர துதிக்கும் - மேகம் வரும்படி துதிக்கின்ற; "தற்பாடிய தளியுணவிற், புள்" (பட்டினப்.) புக்கு அண்டலரை அ சிவம் திருப்பார் - புகுந்து தம்மைச் சேராதவரை அந்த முத்திக்குரிய வழியில் திருப்பாதவர். செக்கச் சிவந்திருப்பார்; மிகச் சிவந்திருப்பார்; வழக்கு.

23. ஆடிப் படர்காற்று மாடரவின் செம்மணியும்
கோடிப் படங்காட்டுங் குற்றாலம்—பீடித்து
வந்தநியா கத்தருவார் வந்தனையாற் கந்தனைமுன்
சந்ததியா கத்தருவார் சார்பு.

24. தோட்டுநறும் பூமரத்துஞ் சோணைமத மாமுகத்தும்
கோட்டுவழி தேனிரைக்குங் குற்றாலம்—எட்டெழுதா
வேதத் துவனிடத்தார் மிக்கதந்தை தாடடிந்த
மாதத் துவனிடத்தார் வாழ்வு.

25. மேடைத் தளமுமதின் மென்கொடியுஞ் செங்கதிரோன்
கோடைக்கு வாடைதருங் குற்றாலம்—ஆடைக்கு
மாதங்க மன்றுரித்தார் மாணிக்கம் வெள்ளிசெம்பொன்
மாதங்க மன்றுரித்தார் வாழ்வு.

26. வல்லியர்செய் குன்றுகளும் வண்பாடல் வண்டுகளும்
கொல்லிமலை யத்திசைக்குங் குற்றாலம்—செல்வச்
சிவமதுகங் கைத்துறையார் செம்மையிலார் நெஞ்சிற்
பவமதுகங் கைத்துறையார் பற்று.

---

23. ஆடிமாதத்துக் காற்று, புதுமையாகிய படங்களைக் காட்டும்; ஆடிக் காற்றில் படம் பறக்கவிடுதல் இயல்பு; படம் - பட்டம் அல்லது காற்றாடி. அரவின் மணிகளைக் கோடிப்படம் காட்டும். பீடித்து வந்த - சூரனாற் பீடிக்கப்பட்டு வந்த; தியாகத்தருவார் - கொடுத்தலையுடைய கற்பகத்தைப் பெற்ற தேவர்கள் செய்த; வந்தனையால் - வழிபாட்டினால். சந்ததியாக - பிள்ளையாக.

24. தோடு - பூவிதழ். மரத்தில்: கோட்டு வழி தேன் நிரைக்கும் - கிளைகளின் வழியே தேன் வரிசையாக ஓடும். மதமாமுகத்திலுள்ள: கோட்டு வழி - தந்தத்தினிடத்தில்; தேன் இரைக்கும் - வண்டுகள் மதத்தை உண் பதற்கு ஒலிக்கும். வேதத்து உவனிடத்தார்; உவநிடம் - உபநிடதம். மா தத்துவன் இடத்தார் - சண்டேசநாயனாரது இடத்திலுள்ளவர்.

25. கோடைக்கு வாடை தரும் - கோடையின் வெப்பத்தைத் தீர்த் தற்குக் காற்றைத் தரும்; சூரியனது குதிரைக்கு வீதியைத் தரும். மாதங்கம் அன்று உரித்தார் - யானையை அக்காலத்து உரித்தவர். மாணிக்கம், வெள்ளி, செம்பு, ஒள்ளிய பெரிய தங்கம் இவற்றாலாகிய சபைகளுக்கு உரியவரது; உரித்தார் - உரியவர்; உரித்து, உரிமையென்னும் பொருளில் வந்தது. மாணிக்கமன்று - திருவாலங்காடு. வெள்ளிமன்று - மதுரை. செம்புமன்று - திருநெல்வேலி. தங்கமன்று - சிதம்பரம்.

26. செய்குன்றுகள் கொல்லிமலையையும், மலையத்தையும் ஒத்திருக் கும்; மலையம் - பொதியில்மலை. வண்டுகள், கொல்லிப்பண்ணை மேற்

27. கோடீர மால்வரைக்குங் கூரிருட்கு மாமுனிவர்
கோடீர மாதவஞ்செய் குற்றாலம்—கோடீரம்
தோன்றாக் கடலடைத்தான் றாயபணிக் காப்பகையை
வான்றாக் கடலடைத்தான் வாழ்வு.

28. பம்புகுயில் காமனுக்கும் பானுமதி வான்வழிக்கும்
கொம்பு குறித்துவருங் குற்றாலம்—நம்புமெனை
ஆளத்திக் கண்ணுதலா ரண்ணா மலைகாசி
காளத்திக் கண்ணுதலார் காப்பு.

29. தார்களினாற் போதளைந்துந் தண்டே னிறால்கிழிந்தும்
கூர்களினல் வண்டிரைகூர் குற்றாலம்—மார்கழிநாள்
இட்டவிழாச் செங்கையா ரேந்தரவக் கங்கணத்தின்
கட்டவிழாச் செங்கையார் காப்பு.

கொள்ளுதற்குத் திகைக்கும்; மலைய - மேற்கொள்ள; திசைத்தல் - திகைத்தல்; "திசைத்தது மில்லை யெனக்கு வந்து தீயோர், இசைத்தது மில்லை" (கம்ப. கைகேசி சூழ்வினை. 19.) செல்வம் பொருந்திய சிவமதுகங்கைத் துறையார்; சிவமது கங்கை - குற்றாலத்திலுள்ள ஓர் அருவித்தீர்த்தம். பவம் மதுகம் கைத்து செம்மையிலார் நெஞ்சில் உறையார் - பிறப்பாகிய இருப்பை மரத்தை வெறுத்துச் செம்மையில்லாதாருடைய நெஞ்சில் உறையாதவர்.

27. கோடு ஈரம் மால் வரைக்கு - சிகரங்களையுடைய குளிர்ச்சியான பெரிய மலையில்; முனிவர் கோள் தீர மாதவம் செய் - முனிவர்கள் குற்றங்கள் தீரும்படி பெரிய தவத்தைச் செய்யும். கூர் இருட்கு - மிக்க இருளைத் தீர்த்தற்கு; முனிவரது கோடீரம்; கோடீரம் - சடை; ஆதவம் செய் - வெயிலைச்செய்யும். கோள் தீரம் தோன்றா - வலிய கரைகள் தோன்றாத. கடல் அடைத்தான் - கடலில் அணைகட்டிய இராமனது. பணிக்கா - பணி விடைக்காக. பகையை - இராவணன் முதலிய பகையை. வான் தாக்கு அடல் அடைத்தார் - வானில் தாக்கும் அடலை அவனுக்குச் சேர்த்தவரது; இவ்விருவரும் ஆகாயத்திற்போர் செய்தமை இங்கே அறிதற்குரியது.

28. காமனுக்கு - மன்மதனுக்கு; குயில் கொம்பு குறித்து - குயில் கொம்பு ஊதி; மன்மதனுக்குக் குயில் காளம். பானுமதி - சூரியனும் சந்திரனும்; வான் வழிக்கு - வான்வழியே செல்லுதற்கு; கொம்பு குறித்துவரும் - இங்கேயுள்ள மரங்களின் கொம்பு தம்மேற் படாதபடி குறித்து வருகின்ற. எனை ஆள - என்னை ஆளுதற்கு. திக்கு அண்ணுதலார் - கதியாக அணுகுதலை யுடையார்; "அட்ட திக்கிலு மினியொரு திக்கிலை" (குமா. 418.)

29. தார்களில் நாற்போது அளைந்து கூர் கள்ளின் ஆல் வண்டு இரை கூர் - மாலைகளில் உள்ள கோட்டுப்பூ முதலிய நால்வகைப் பூக்களில் அளைந்து மிக்கதேனில் ஒலிக்கின்ற வண்டுகள் இரையை மிக உண்ணுகின்ற. கூர்களினால் இறால்கிழிந்து வண் திரைகூர் - கூரிய கொம்புகளால் தேனடை

30. தாளசலங் கைந்நிமிர்ப்பத் தண்சுடரும் வெஞ்சுடரும்
கோளரவ மென்றயிர்க்குங் குற்றாலம்—நீளரவம்
ஆர்க்கு மறைச்சிலம்பா ராடருவி பொன்றாரை
வார்க்கு மறைச்சிலம்பார் வாழ்வு.

31. விம்பவித ழார்முலைக்கு மெய்த்தவத்த ருங்கணிக்கும்
கும்பமுனி யாவணஞ்சேர் குற்றாலம்—தம்படிவப்
பங்கொடுகண் டங்கறுத்தார் பண்டுதக்கன் சென்னியைக்கோ
பங்கொடுகண் டங்கறுத்தார் பற்று.

32. கன்றார்க்குங் காந்தளங்கைக் கன்னியர்க்குந் தொல்குடிக்கும்
குன்றாத் தனங்குவியுங் குற்றாலம்—ஒன்றான
மூலவோங் காரத்தார் மூசுவரிப் பன்னகங்கள்
சாலவோங் காரத்தார் சார்பு.

கிழியப்பெற்று வளவிய (தேன்வெள்ளத்தின்) அலைகள் மிக்க. மார்கழி மாதத்தில் தமக்கு இஷ்டமான விழாவைத் திருவாதிரைநட்சத்திரத்தில் உடையவர்; செங்கை - திருவாதிரை நட்சத்திரம். கங்கணத்தின் கட்டு அவிழாத சிவந்த கையையுடையவர்.

30. இச்செய்யுளிற் சிலேடை இல்லை. தாள் அசலம் - யானை. கோள் அரவம் என்று - ஒன்பது கோள்களுள் ஒன்றாகிய ராகுவென்று. அயிர்க்கும் - சந்தேகிக்கும். யானையின் துதிக்கைக்குப் பாம்பு உவமை. அரவம் ஆர்க்கும் மறைச்சிலம்பார் - ஒலியை மிகச் செய்கின்ற வேதமாகிய சிலம்பையுடையவர். ஆடருவி - வடவருவி. பொன்தாரை வார்க்கும். அறை சிலம்பார் - பாறைகளையுடைய திரிகூடாசலமென்னும் மலையையுடையவரது.

31. விம்ப இதழார் முலைக்கு - கொவ்வைக்கனிபோன்ற அதரத்தையுடைய மகளிரது நகிலுக்கு; கும்பம் முனியா வண்ணம் சேர் - குடம் கோபம் கொள்ளாதவிதமாகச் சேரப்பெற்ற. மெய்த்தவத்தரும்: உம்மை, சிறப்பு; கணிக்கும் - மேலாகக் கருதும்; கும்பமுனி ஆவணம் சேர் - அகத்திய முனிவர் வீதியில் சேரும். படிவம் - வடிவம். பங்கு - இங்கே இடப்பாகம். கண்டம் - கழுத்து; "கண்டமுங் காமர் மெய்யுங் கறுத்தவர்" (தும ர. 166.) கோபம் கொடு கண்டு அங்குச் சென்னியை அறுத்தார்; சென்னி - தலை.

32. கன்று - வளையல். கன்னியர்க்கு, குன்றாகத் தனம் குவிந்திருக்கப் பெறும்; தனம் - நகில். குடிகளுக்கு: குன்றாத்தனம் குவியும் - குறையாத செல்வம் குவிகின்ற. மூல ஓங்காரத்தார் - எல்லாவற்றிற்கும் காரணமாகிய பிரணவமந்திரத்தையுடையவர். பன்னகங்கள் - பாம்புகளாகிய. சால - மிக. ஓங்கு ஆரத்தார்; ஆரம் - மாலை.

33. வாடிய மெய்த்தவரும் வாரி மணித்திரளும்
கோடி வரம்படைக்குங் குற்றாலம்—நீடியதாள்
மன்றினிடைத் தூக்கினர் வான்கோ வணத்திலன்பர்
நன்றினிடைத் தூக்கினர் நாடு.

34. இட்டுண்பார் கைக்கு மினவளையா ராடலுக்கும்
கொட்டுந் தருவிளைக்குங் குற்றாலம்—பிட்டுண்டு
வைகைக் கரைசமைத்தார் வாழ்மூர்த் திபைமதுரை
உய்கைக் கரைசமைத்தா ரூர்.

35. சேட்டுவரைத் தேனுக்குஞ் செண்பகப்பூங் கானுக்கும்
கோட்டுமறு கால்விலகுங் குற்றாலம்—காட்டு
நரியும் பரிசெய்தார் நல்லறிவில் லார்க்குத்
தெரியும் பரிசெய்தார் சேர்வு.

36. தேவரிசை வானுட்டுத் தேனுவுஞ்சொற் பாவலரும்
கோவரிசை யேற்கவருங் குற்றாலம்—பூவரிசை

---

33. மெய்த்தவர்: கோடி வரம் படைக்கும் - கோடியளவான வரங்களைப் படைக்கும். மணித்திரள் கோடு இவர் அம்பு அடைக்கும் - மணிகளின் கூட்டங்கள் கரையில் ஏறுகின்ற நீரை அணையாக அடைக்கும். தாளை மன்றினிடைத் தூக்கினர். கோவணத்தில் - கோவணத்தால். அன்பர் - அமர்நீதி நாயனாருடைய. நன்றின் இடை - சிவபுண்ணியமாகிய எடையை அளவிட்ட; தூக்கினர் - தராசையுடையவராது.

34. கொட்டும் தரு இட்டுண்பார் கைக்கு இளைக்கும் - தியாகப் பொருளைச் சொரியும் கற்பகதரு பிறருக்கு இட்டு உண்பவருடைய கைக்குத் தோற்கும். மகளிர் ஆடலின் பொருட்டு: கொட்டும் தரு விளைக்கும் - கொட்டுதற்குரிய கீர்த்தனங்களை மேன்மேலும் உண்டாக்கும்; தரு - கீர்த்தனங்கள். வைகை நதியின் கரையைச் சமைத்தவர். மூர்த்தியை - மூர்த்தி நாயனாரை; உய்கைக்கு - பிழைத்தற்பொருட்டு; அரைசு அமைத்தார் - அரசராக அமைத்தவராது.

35. சேடு - பெருமையையுடைய. தேனுக்கு கோட்டு மறு கால் விலகும் - தேனருவியாற்றுக்குக் கரையையுடைய வேறு வாய்க்கால்கள் குறுக்கே ஓடும். கோட்டும் அறுகால் - வளைந்த ஆறுகால்களையுடைய வண்டுகள்; விலகும் - விலகிச்செல்லும்; செண்பகப்பூந்தேனை வண்டுகள் உண்ணுவதில்லை. காட்டிலுள்ள நரியையும் பரியாகச் செய்தார்; உம்மை, இழிவு சிறப்பு. தெரியும் பரிசு எய்தார் - தெரியும்வண்ணம் அடையாதவர்.

36. தேவர் இசை - தேவர்கள் பொருந்திய. தேனு - காமதேனுவானது; கோவர் இசை ஏற்க வரும் - இடையரது வேய்ங்குழலினிசையை ஏற்றுக்கொள்ள வருகின்ற. பாவலர் கோ வரிசையேல் கவரும் - கவிஞர் அரசனாற் கொடுக்கப்படும் வரிசையாயின் பெற்றுக்கொள்ளும்; பிறரிடத்துப்

ஓதியர்கற் பங்கழிப்பா ரோர்கணத்திற் பல்கோடி
வேதியர்கற் பங்கழிப்பார் வீடு.

37. காட்டுக் கனியழித்துங் கான்யாறு நீர்செழித்தும்
கோட்டுக் குரங்குறையுங் குற்றுலம்—தோட்டுக்
கிருவா ரணத்தினு ரீரா யிரங்கோட்
டொருவா ரணத்தினு ரூர்.

38. காலஞ்செய் வேனிற் கழைமதனு நாடகரும்
கோலஞ்செய் தாடிவருங் குற்றுலம்—மூலஞ்சேர்
செம்மற்காண் டீபனுர் தேகமறப் பூவாளிச்
செம்மற்காண் டீபனுர் சேர்வு.

39. ஒட்டினருங் கூத்தினரு மோடையும்வா ளுந்துகிலும்
கொட்டினெய்த லேக்காட்டுங் குற்றுலம்—கட்டியபூண்
அக்குமணிக் கோவையா ரம்பரவை நாவலன்சொல்
வைக்குமணிக் கோவையார் வாழ்வு.

பெறுமென்றபடி. ஓதியர் - தாருகாவனத்து முனிவர் பத்தினிகளுடைய. கற்பு அங்கு அழிப்பார். வேதியர் - பிரமதேவர்களது. கற்பம் - பிரமன் வாழ் நாள். பல பிரமர்களுக்குரிய கற்பம் இவருக்கு ஒரு நொடிப்பொழுதென்றபடி.

37. கனிகளை அழித்துக் கோட்டுக் குரங்கு உறையும் - பழங்களை உண்டு அழித்து மரக்கிளைகளில் குரங்குகள் தங்கும். நீர் செழித்தலால்: கோட்டுக்கு உரம் குறையும் - கரைக்கு வன்மை குறையப்பெற்ற. தோட்டுக்கு இரு வாரணத்தினுர் - தோடாக அணிதற்கு இரண்டு சங்குகளை யுடையவர். ஈராயிரங் கொம்பையுடைய ஒரு வாரணம்; ஐராவணம் என்னும் யானை.

38. வேனிலில்: மதன் - மன்மதன்; கோல் அஞ்சு எய்து ஆடிவரும் - பஞ்சபாணங்களை எய்து வென்றுவரும். நாடகர்: கோலம்செய்து ஆடிவரும் - அலங்காரங்களைச் செய்துகொண்டு கூத்தாடி வருகின்ற. மூலம் சேர் - பஞ்சாட்சரமாகிய மூலமந்திரத்தை இடைவிடாது நினைத்த; செம்மல் காண்டீபனுர் - செவ்விய மற்போர் செய்த காண்டீபனையுடையவர்; காண்டீபன் - அர்ச்சுனன்; காண்டீபம் - அர்ச்சுனனது வில். தேகம் அறும்படி. பூ வாளிச் செம்மல் - மன்மதனை. காண் தீபனுர் - பார்த்து எரித்த தீபம்போன்ற நெற்றிக்கண்ணை யுடையவர்.

39. இச்செய்யுளில் ஐம்பொருட் சிலேடை வந்தது. ஒட்டினர் - சபதஞ்செய்த போர்வீரர்; கொட்டின் எய்தலைக் காட்டும் - தோளைக் கொட்டுதலோடு அம்பு எய்தலைக் காட்டும். கூத்தினர், வாத்தியங்களைக் கொட்டுதலோடு வருதலை. ஓடை, கொட்டிப்பூவையும் நெய்தற்பூவையும் காட்டும்; கொட்டி - ஒருவகை நீர்ப்பூடு. வாள், (சம்மட்டியால்) அடிக்கப் பட்டு நெய் தலைக்கு ஆட்டும்; வாளில் நெய் பூசுதல் வழக்கம்.

40. மன்றத்தின் மாளிகைமேல் வானிரவி வந்தேறிக்
குன்றத்தின் மேல்விளக்காங் குற்றாலம்—பொன்றத்தும்
தேனு ருவியார் தெய்வமலர்ச் செண்பகப்பூங்
கானு ருவியார் காப்பு.

41. ஆள்வேடர் கொல்லையினு மாயரிசை முல்லையினும்
கோள்வேங்கை தேக்கெறியுங் குற்றாலம்—நீள்வேழத்
தந்திவழி பாட்டினர் சங்கமெலாஞ் செந்தமிழ்த்தேன்
உந்திவழி பாட்டின ரூர்.

42. சாலஞ்செய் வித்தகருஞ் சாபநுத லார்விழியும்
கோலம் பலகாட்டுங் குற்றாலம்—சூலம்
விரும்புவன சக்கரத்தார் வேதாவாய்ப் பண்டு
தரும்புவன சக்கரத்தார் சார்பு.

நூலைத் தட்டி நெய்தற்றொழிலைத் துகில் காட்டும். சிலேடையில் ணகர நகரங்கள் வேற்றுமையின்றி வந்தன. பூணக அக்குமணிக்கோவையை உடையவர்; அக்குமணி - சங்குமணி; உருத்திராக்கமுமாம். பரவையை யுடைய நாவலன்; சுந்தரமூர்த்திநாயனர். சொல் வைக்கும் மணிக்கோ - மாணிக்கவாசகர். ஐயார் - இவ்விருவருக்குந் தலைவர்.

40. இச்செய்யுளிற் சிலேடை இல்லை. மாளிகை - மேன்மாடம். தேனருவியார் - தேனருவியை யுடையவர்; தேனருவி: குற்றாலத்தில் உள்ள ஒரு விசேட தீர்த்தம்; இது சிவமதுகங்கை எனவும் வழங்கும் (20). செண்பகப்பூங் கானர் - செண்பகாரணியத்தை உடையவர்; சண்பகாரணியம்: இத்தலத்தைச் சார்ந்ததாகிய ஒரு பூஞ்சோலை; இதுபற்றியே இத்தலம் சண்பகக் குற்றாலம் என்று வழங்கப்படும். அருவியார் - அருவத்தையுடையவர்.

41. ஆட்சிபுரியும் வேடர்கள் தினைக்கொல்லையில் வலியையுடைய வேங்கைமரத்தையும் தேக்குமரத்தையும் வெட்டி எறிகின்ற. ஆயர் இசைந்த முல்லையில்; கோள் வேங்கை தேக்கு எறியும் - கொல்லுதலை யுடைய வேங்கைப்புலி (மான்முதலியவற்றைக் கொன்று தின்று) ஏப்பம் விடும். தந்தி வழிபாட்டினர் - யானை செய்த வழிபாட்டினை யுடையவர்; இதனைத் தற்றலப் புராணத்துள்ள யானைபூசித்த சருக்கத்தால் அறியலாகும். சங்கமெல்லாம் - புலவர் கூட்டங்களிலெல்லாம். செந்தமிழ்த் தேன் உந்தி - செந்தமிழாகிய தேனை. வழிகின்ற பாட்டுக்களையுடையவர்.

42. சாலம்செய் வித்தகர் - இந்திரசாலம் முதலியவற்றைச் செய்யும் திறமையையுடையோர்; கோலம் பல காட்டும் - பலவகையான காட்சிகளைக் காட்டும். சாபநுதலார் - வில்லைப்போன்ற நெற்றியையுடைய மகளிரது; விழி கோல் அம்பு அலகு ஆட்டும் - கண்கள் ஈர்க்கையுடைய அம்பினது

43. மாத்தருவின் மேற்கவியும் வானுற்றிற் கான்யாறும்
கூத்தரங்க மேவுதிருக் குற்றாலம்—ஏத்தயன்பூச்
சாத்தனடிக் கும்மடியார் சாக்கியன்கல் லாலெறியப்
பாத்தனடிக் கும்மடியார் பற்று.

44. வாவி யிடமும் வடவரையென் றுதவரும்
கோவில் வலம்புரியுங் குற்றாலம்—மூவிலைவெஞ்
சூலக் கபாலத்தார் தொந்தக் கபாலத்தார்
மேலக் கபாலத்தார் வீடு.

45. ஏடார் மலர்த்தடமு மீவார் மனத்திடமும்
கோடாமை நீரூருங் குற்றாலம்—ஆடானை
தேவைப் பரங்கிரியார் சீராரூர் தென்னானைக்
காவைப் பரங்கிரியார் காப்பு.

நுனியை வருத்தும். சூலம் விரும்பு - சூலாயுதம் விரும்பப்பெற்ற. வன சக்கரத்தார் - தாமரைமலர் போன்ற திருக்கரத்தையுடையவர். பண்டு வேதாவாய் தரும் - முற்காலத்தில் பிரமதேவராகிப் படைத்த. புவன சக்கரம் - பூமண்டலம்.

43. கவி கூத்தர் அங்கம் மேவு - குரங்குகள் கூத்தருடைய அங்கத்தைப் பொருந்தும்; கூத்தாடு மென்றபடி. கான்யாற்றினது: கூ தரங்கம் வானுற்றில் மேவு - கூவுகின்ற அலை வானுற்றினிடத்தே பொருந்தும். அயன் - பிரமதேவன். பூவைச் சாத்த நடிக்கும் திருவடியை யுடையவர். சாக்கியன் - சாக்கிய நாயனார். எறிய - எறியாநிற்க. பாத்தன் = பார்த்தன் - அருச்சுனன். ரகரம் தொகுத்தல். அடிக்கும் அடியார் - வில்லால் அடித்த அடியை உடையவர். பின்னிரண்டடிகளில் திரிபு நோக்கித் தந்நகர றன்னகரங்கள் மயங்கின.

44. வாவியிடத்தில்: கோவில் வலம்புரியும் - சிறந்த இந்திரவில் வெற்றியைச் செய்யும்; "வாரி, இந்திர தனுவைச் சார்ந்தா னிந்திரன்" (திருக்குற்றலப். தேவர்கள் சிவத்துரோகந்தீர்ந்த. 14.) வடவரை என்று - மேருமலை என்றெண்ணி; ஆதவர் - சூரியர்; கோவிலை வலம் செய்யும். சூலத்தையும் கபாலத்தையும் உடையவர். தொந்தமாகிய கபாலத்தை உடையவர்; தொந்தம் - நடனம்; கபாலம் - இறைவன் கூத்தினுளொன்று; "தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கால்" (கலி. I: 12.) மேல் அக்கம் பாலத்தார் - மேல் கண்பொருந்திய நெற்றியை உடையவர்.

45. தடம் - தடாகங்களில்; கோடு ஆமைநீர் ஊரும் - சங்கும் ஆமையும் நீரின்மேலே செல்லப்பெற்ற. மனத்திடம் கோடாமையாகிய தன்மை ஊரும்; கோடாமைநீர் - பக்ஷபாத மின்மையாகிய இயல்பு. தேவை - இராமேச்சுரம். வைப்பு அரங்கு இரியார் - ஆடானை முதலிய தலங்களையும் அரங்கையும் விட்டு நீங்காதவர்; வைப்பு - தலம்; அரங்கு - சபை.

46. முருகுகுழ லார்காமு முன்னீர்த் தடமும்
குருகு வளையார்குற் றாலம்—செருகுசடைக்
கங்காளர் நம்பரமர் கன்னிகுழல் வாய்மொழிசேர்
பங்காளர் நம்பரமர் பற்று.

47. சீதச் சிலம்பருவித் தீர்த்தமுநல் லார்குழலும்
கோதைக் கழுநீர்பெய் குற்றாலம்—வேதத்துத்
தெள்ளியரங் கத்தினர் செம்பரங்கம் பொன்னரங்கம்
வெள்ளியரங் கத்தினர் வீடு.

48. வேடாம்பொன் வட்டெடுத்து மென்கனிக டேன்மடுத்தும்
கோடரகளு மட்டெறியுங் குற்றாலம்—காடரங்கா
முற்றென் பிழைபொறுத்தார் முண்டகனைக் கோபித்தார்
மற்றென் பிழைபொறுத்தார் வாழ்வு.

---

46. முருகுகுழலார் காம் - மணம் பொருந்திய கூந்தலையுடைய மகளிர் கைகள்; குருத வளை ஆர் - வளைகள் சூழ்தல் பொருந்திய. தடம் - தடாகங்கள்; குருகு வளை ஆர் - பறவைகளும் சங்கும் ஒலிக்கின்ற; நிறமுடைய குவளைப்பூக்கள் பொருந்திய எனலும் ஆம். சடையையும் கங்காளத்தையும் உடையவர்; கங்காளம் - முழுவெலும்பு. நம்முடைய பரமர். குழல்வாய் மொழி: இத்தலத்து அம்பிகையின் திருநாமம். பங்கு ஆளர் நம்பர் அமர் பற்று; அமர் - விரும்புகின்ற; பற்று - இடம்.

47. தீர்த்தம் கோதை கழுநீர் பெய் - வடவருவித்தீர்த்தம் ஆடுவோருடைய பாவத்தைக் கழுநீராகப் பிரித்து ஓடச்செய்கின்ற. வடவருவித் தீர்த்தம், தன்பால் ஆடினோரது பாவத்தைக் கழுநீராகப் பிரித்து ஓடச் செய்தலை, "களங்கமுறு மலமகற்றிப் பாவமெலாங் கழுநீராக் கழுவு மாற்றால், உளம்பெறுதா னப்பலனும் வடவருவிப் புனல்படிந்தார்க் குளதாமன்னோ" (குற்றலப். வடவருவி. 51) என்பதனால் அறியலாகும். குழல் - கூந்தல்; கோதைக் கழுநீர் பெய் - கழுநீர்மாலையைச்சூடுகின்ற. வேதத்துத் தெள்ளியர். அங்கத்தினர் - ஆறங்கத்தையுடையவர். வெள்ளி அரங்கத்தினர்; அரங்கம் - சபை.

48. வட்டு - ஒருவகை விளையாட்டுக்கருவி; கோடாகிய அரங்கினள வில் எறியும்; "கட்டளை யன்ன விட்டாக் கிழைத்துக், கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்" (நற்.) கனிகளையுந் தேனையும் உண்டு; கோடரம் குமட்டு எறியும் - குரங்கு கக்குதலைச்செய்யும். காட்டை அரங்காகக் கொண்டு. முற்று என்பு இழை பொறுத்தார் - முற்றிய எலும்பாலாகிய ஆபரணத்தைத் தாங்கியவர். மற்று: அசைநிலை. என் பிழையைப் பொறுத்துக் கொண்டவர்.

49. ஏறுமலைப் பன்மணியா லெங்குமலைத் தேனூற்றுல்
கூறு திரைவனஞ்சேர் குற்றுலம்—நீறுபுனை
செச்சைவனப் பாகத்தார் தேவிகுழல் வாய்மொழிசேர்
பச்சைவனப் பாகத்தார் பற்று.

50. மேலாம் பரமபத வீடுதிறக் குந்திறவு
கோலாம் வடவருவிக் குற்றுலம்—நூலாதி
வேதாக மந்திரிப்பார் வெள்ளெ னும்பைப் பிள்ளைசொல்லால்
மாதாக மந்திரிப்பார் வாழ்வு.

51. மாத்துங்க வேடுவர்க்கு மாமயில்க ளாடலுக்கும்
கோத்தும்பி யூதியமாங் குற்றுலம்—எத்துமறைப்
பாட்டுமுடி வேய்ந்தார் பசுப்படுக்கு மாமனுக்கோர்
ஆட்டுமுடி வேய்ந்தா ரகம்.

52. சூராம்பை நேர்விழியார் சொற்பணியும் பொறகுறங்கும்
கூரரம்பை மேனகைசெய் குற்றுலம்—போரரங்கம்
அட்டுந் தமருகத்தா ராடுங்கூத் துக்கொருகை
கொட்டுந் தமருகத்தார் குன்று.

---

49. பன்மணியால் - தினைப்புனத்திலுள்ள மகளிர் கிளிமுதலிய வற்றை ஒட்டுகின்ற பலமணிகளால்; கூறு உதிர் ஐவனம் சேர் - கூறுகள் உதிர்ந்த மலைநெல் சேரப்பெற்ற. தேனூற்றுற் கூறப்படும் அலை காட்டைச் சேர்கின்ற. செச்சை வனப்பு ஆகத்தார் - வெட்சிப்பூவைப்போன்ற அழகையுடைய திருமேனியையுடையவர்; "செச்சை மலர்புரையு மேனி" (திருவாசகம்.) குழல் வாய்மொழி சேர்ந்த பச்சை வர்ணப் பாகத்தார்.

50. இதிற் சிலேடை இல்லை. ஆகிநூலாகிய வேதாகமங்களை. திரிப்பார் - செய்வார்; திரித்தல் - நூல் திரித்தல்; நூற்றல் என்பது போல. பிள்ளை சொல்லால் - சம்பந்தமூர்த்தியின் திருவாக்கால். எலும்பை மாதாக.

51. வேடுவர்க்கு - வேடர்களுக்கு; கோ தும்பி ஊதியமாம் - சிறந்த யானைகள் லாபமாகக் கிடைக்கப்பெற்ற. மயில்கள் ஆடலுக்கு: கோத்தும்பி ஊது இயமாம் - சிறந்த வண்டு ஊதுகின்ற வாத்தியமாகும். மறைப்பாட்டு முடிவு எய்ந்தார் - வேதமாகிய பாட்டின்முடிவில் பொருந்தியவர். மாமனுக்கு - தக்கனுக்கு; ஆட்டின் தலையை வைத்தவரது.

52. சூருடைய அம்பை ஒத்த விழியார்; பணி - கட்டளையை; கூர் அரம்பை மேனகை செய் - மிக்க அரம்பையும், மேனகையும் செய்கின்ற. பொற்குறங்கு - அவர்களுடைய அழகிய தொடையானது; கூர் அரம்பைமேல் நகைசெய் - மிக்க வாழையை நகைக்கின்ற; மேல்: உருபுமயக்கம். போர் அரங்கம் அட்டு உந்து அமர் உகந்தார் - போர்க்களத்திற் சென்று செலுத்துகின்ற போரை விரும்பியவர்; உகத்தார் - உகந்தார்; வலித்தல்விகாரம். தமருகம் - உடுக்கை.

53. பாடலார் முத்தமிழ்க்கும் பார்த்திபர்பால் வெம்போர்க்கும்
கூடலார் சங்கமெய்க்குங் குற்றாலம்—ஆடலார்
பாண்டரங்க மேவினர் பாண்டியனூ ரஞ்சவையைச்
சேண்டரங்க மேவினர் சேர்வு.

54. வம்புருவான் கற்பகமும் வண்பிறைசேர் வெற்பகமும்
கொம்புருவ வேழமுறழ் குற்றாலம்—தும்புருவின்
கானத் தடங்காதார் காசினியிற் பாதலத்தில்
வானத் தடங்காதார் வாழ்வு.

55. ஊடிமடப் பாவைபரு மோங்கலரு வித்தடமும்
கூடு மணங்காட்டுங் குற்றாலம்—தோடுபுனை
காதரவக் குண்டலத்தார் கஞ்சனறி யாமௌலி
மீதரவக் குண்டலத்தார் வீடு.

56. வெங்கைக் களிறொலிக்கு மின்னினிடைப் பொன்னனையார்
கொங்கைக்கு மாசுணங்கூர் குற்றாலம்—பைங்கயிலை
வேதண்ட மேவினர் மேருவொடு விண்டுவெனும்
கோதண்ட மேவினர் குன்று.

---

53. பாடலார் முத்தமிழ்க்கும் - இத்தலத்திலுள்ள பாடல் ஆர்ந்த முத்தமிழ்க்கும்; கூடல் ஆர் சங்கம் மெய்க்கும் - மதுரையிலுள்ள தமிழ்ச் சங்கத்திலுள்ளார் இளைக்கும்; சங்கம்: ஆகுபெயர். பார்த்திபர் - அரசர்; கூடலார் சங்கம் - பகைவருடைய கூட்டமானது. (பி - ம்.) 'மொய்க்கும்'. பாண்டரங்கக்கூத்தை மேவினர். பாண்டியனும் அவனூரான மதுரையும் அஞ்சும்படி வையையினது உயர்ந்த அலையை ஏவினர்.

54. கற்பகத்தின் கொம்பை உருவ வேழம் உறழ்; வேழம் - மூங்கில்; உறழ்தல் - மாறுபட்டுச் செல்லுதல். வெற்பகம் கொம்பையுடைய உருவம் பொருந்திய வேழத்தை உறழ்கின்ற; வேழம் - யானை; உறழ்தல் - ஒத்தல். தும்புருவின் கானத்தைக் கேட்டருள்கின்ற தடங்காதார். காசினியிலும், பாதலத்திலும், வானத்திலும் அடங்காதவர்.

55. ஊடிய பாவையர் முன்பு கூடியதனுற் பெற்ற வாசனையைக் காட்டும். அருவித்தடம் மகளிரைச்சேர்ந்த தெய்வங்களை வருத்தம். தோடு புனைந்த காதில் அரவக்குண்டலத்தை உடையவர். மௌலியை மேலேயுள்ள ஒலிக்குக் காரணமான ஆகாயமாகப் பெற்றவர்; "ஆகாசகேசனைமா கேசனைமா கேச்சுரனை யடையா நின்றேன்" (திருவானைக்காப் புராணம்.)

56. களிறொலிக்கு - யானையின் ஒலியைக்கேட்டற்கு; மாசுணங் கூர் - பெரும்பாம்புகள் விருப்பம் மிகுகின்ற. யானையை மலைப்பாம்பு உண்ணும். பொன்னனையார் - மகளிரது; கொங்கைக்கு - நகில்களில்; மாசுணக்கு ஊர் - பெரியதேமல் பரவும். கயிலையாகிய வேதண்டத்தில் மேவினர்; வேதண்

57. ஆடவர்ச்சேர் வாரு மவர்வாவு பார்ப்பாரும்
கூடல்வளைக் கைவிடாக் குற்ருலம்—வாடல்
விதுவைத் தரித்தார் மிளிர்வலையின் மீனன்
பதுவைத் தரித்தார் பதி.

58. சேல்வளையு நீர்த்திரையுந் தெய்வமெனக் கொண்கரையும்
கோல்வளையா ரஞ்சலிக்குங் குற்ருலம்—மால்வடிவாய்
வேதவனச் சங்கெடுத்தார் வேறுமழு மானெடுத்தோர்
மாதவனச் சங்கெடுத்தார் வாழ்வு.

59. சிட்ட மருத்துவருந் தேனருவி பாய்தடமும்
குட்டங் கயந்தணிக்குங் குற்ருலம்—இட்டகுழை
வென்றிப்பாம் பாட்டினுர் மீனவன்சிந் தாசமுத்தி
ஒன்றிப்பாம் பாட்டினு ரூர்.

டம் - மலை. மேருவைக் கோதண்டமாகவும், விண்டுவை ஏவாகவும உடையவர்; விண்டு - திருமால்; கோதண்டம் - வில்; ஏ - அம்பு.

57. ஆடவர்ச்சேர்வார் - தம் கணவரைக்கூடிய மகளிர்; கூடு அல் வளைக்கை விடா - கூடுதற்குரிய இரவில் வளைக்கையை நெகிழவிடாத; இறுகத்தழுவுவார் என்றபடி. அவாவு வரவைப் பார்க்கும் மகளிர் கூடற் சுழியை வளைத்தலைவிடாத; வளைக்கை - வளைத்தல். வாடல் விதுவைத்தரித்தார் - தக்கன் சாபத்தால் வாடுதலையுடைய பிறையை அணிந்தவர். மீன் - நந்திதேவராகிய மீனை. அன்பு வைத்து அரித்தார் - அன்பை வைத்து அரித்து எடுத்தவர். அன்பது: அது, பகுதிப்பொருள் விகுதி. இதிலடங்கிய வரலாற்றைத் திருவிளையாடற்புராணம், வலைவீசியபடலத்தால் அறியலாகும்.

58. நீர்த்திரை - நீரிலுள்ள அலை; கோல் வளை ஆரம் சலிக்கும் - பூங்கொம்பையும், சங்கையும், முத்தையும் அசையச் செய்யும். கோல்வளையார் - திரண்டவளையை அணிந்த மகளிர்; கொண்கரை அஞ்சலிக்கும் - கணவரை வணங்கும். மால்வடிவாய் - திருமாலின் வடிவமாகி; வேதம் வனம் சங்கு எடுத்தார் - முதலில், வெள்ளிய நிறத்தையுடைய சங்கை எடுத்தவர்; வேதம் - சுவேதம்: முதற்குறை; வனம் = வர்ணம் - நிறம். அதன் பின்பு வேறு மழு மான் எடுத்து ஒரு மாதவனது அச்சத்தைக் கெடுத்தார்; மாதவன் - அகத்திய முனிவர்.

59. சிட்டமருத்துவர் - தூய்மையையுடைய வைத்தியர்; குட்டநோயையும் க்ஷயரோகத்தையும் தணிக்கும். அருவிபாய் தடம்: குட்டம் கயம் தணிக்கும் - மடுக்களையும் குளங்களையும் தனக்குத் தணியச்செய்யும். குழையைப் பாம்பாகக்கொண்டு அதனை ஆட்டினவர். மீனவன் - சண்பகபாண்டியனது. சிந்தாசமுத்தி ஒன்றிப்பாம் பாட்டினுர் - சிந்தாசமுத்தியோடு பொருத்தமுடையதாகிய "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி" (குறுந். 2.) என்னும் முதற்குறிப்பையுடைய பாட்டைத் தருமிக்கு அருளியவர்; சிந்தாசமுத்தி - நினைத்ததையறிந்து பாடுதல்; ஒன்றிப்பு - பொருத்தம்.

60. கிட்டிவரு மாகாய கெங்கையைக்கண் டேயெதிர்கை
கொட்டிவரும் வெற்பருவிக் குற்றாலம்—மட்டிதழி
வாலமதிக் கண்ணியார் மாறனடி யாரடியார்
சீலமதிக் கண்ணியார் சேர்வு.

61. கன்றியபோர் வாரணத்தின் கண்களும்வெய் யோன்பரியும்
குன்றி னிறங்கவருங் குற்றாலம்—நன்றிமனச்
சுத்தரா கத்துதிப்பார் தொல்பாண பத்திரற்குப்
பத்தரா கத்துதிப்பார் பற்று.

62. ஞாலம் புரப்பவர்க்கு நற்றவர்சொன் மற்றவர்க்கும்
கோலமரு மத்தாணி குற்றாலம்—மூலமறை
வேதப் பழந்தருவார் வேலவன்முன் வந்தார்க்குச்
சூதப் பழந்தருவார் தோய்பு.

63. பொற்றால வேந்தனுக்கும் பூங்குழற்கும் வானரம்பை
குற்றால வட்டமிடுங் குற்றாலம்—சிற்றுயன்
பண்குழற்கா னத்துவந்தார் பஞ்சவடிக் காவொருபெண்
வண்குழற்கா னத்துவந்தார் வாழ்வு.

---

60. இச்செய்யுளிற் சிலேடை இல்லை. அருவி - வடவருவி. இதழி - கொன்றை. வாலமதி - பிறை. மாறனடியார் - பாண்டியனது பிரம்படியைப் பெற்றருளியவர். அடியாருடைய சீலமதிக்கு அண்ணியார்.

61. வாரணம் - கோழி; குன்றி நிறம் கவரும் - குன்றிமணியின் நிறத்தைக் கவரும். வெய்யோன் பரி குன்றின் இறங்க வரும் - சூரியனுடைய குதிரைகள் திரிகூடாசலம் என்னும் மலையில் இறங்குதற்கு வருகின்ற. சிலேடைபற்றி நகர னகரபேதம் இலதாயிற்று. மனச்சுத்தர் ஆகத்து உதிப்பார் - தூயமனமுடையவரது மனத்கில் உதிப்பவர். பாணபத்திரற்குப் பத்தாராகத் துதிப்பார் - பாணபத்திரனுக்கு அடியவராக வந்து அவனைத் துதிப்பவர்; விறகுவிற்ற திருவிளையாடலால் இதனை உணரலாகும்.

62. ஞாலம் புரப்பவர்க்கு - அரசருக்கு; கோல் அமரும் அத்தாணி - செங்கோலோடு தங்கியிருக்கப்பெறும் அரசிருக்கை ஆகும். நற்றவருடைய சொல் தவம் செய்யாத மற்றவர்க்கு; கோலம் மருமத்து ஆணி - அழகிய உயிர் நிலையில் குத்தப்படும் ஆணி போலாகும். மறை வேதம் பழம் தருவார் - உபநிடதங்களையுடைய வேதவடிவான பழமையான குறும்பலா மரத்தையுடையவர். வேலவன் முன் வந்தார்க்கு - விநாயகர்க்கு; சூதப்பழம் தருவார் - மாம்பழத்தைத் தருபவர்.

63. பொற்றாலம் - பொன்னுலகம்; வேந்தனுக்கு - இந்திரனுக்கு; வான் அரம்பை - பெரிய வாழை; குறு ஆலவட்டம் இடும் - குறிய விசிறியாக வீசும். வான் அரம்பை - வானுலகத்துள்ள அரம்பையானவள்; குற்று -

64. கெண்டைக்கண் மாதர் கெழுமுதனத் தான்மணத்தால்
கொண்டைக் கலர்முடிக்குங் குற்றாலம்—இண்டைத்தார்
வாசவருக் கத்தார் மருமத்தா ரன்பரெனும்
பாசவருக் கத்தார் பதி.

65. மாடக் கிளியும் வருவிருந்து பார்ப்பவரும்
கூடத் தமிழ்திட்டுங் குற்றாலம்—ஆடரவக்
கண்டிகைமெய்ச் சுந்தரத்தார் காபாலக் கூத்தாடல்
சண்டிகைமெய்ச் சுந்தரத்தார் சார்பு.

66. பொன்சிகரித் தேனுறும் புத்தேளி ராலயமும்
கொன்சிகரங் கோபுரஞ்சேர் குற்றாலம்—முன்சிகரம்
தந்துளவஞ் சக்கரத்தார் தந்துளவஞ் சக்கரத்தார்
தந்துளவஞ் சக்கரத்தார் சார்பு.

பறித்து; பூங்குழற்கு ஆலவட்டம் இடும் - கூந்தலுக்கு மலர்களின் வட்டத்தை இடுகின்ற; ஆலம் - பூ. சிற்றுயன் - பிராயத்திற் சிறியவரான ஆனய நாயனாருடைய; குழற்கானத்து உவந்தார் - வேய்ங்குழலின் இசைக்கு உவந்தார். ஒரு பெண் - மானக்கஞ்சாற நாயனாருடைய மகளது; குழற் கானத்தின்பொருட்டு வந்தார்.

64. தனத்தால் - தம் நகில்களால்; கொண்டைக்கு - மாட்டின் இமிலுக்கு; வழக்கு; அலர் முடிக்கும் - பழிமொழியை உண்டாக்கும். மாதர், மண முள்ளமையின் கொண்டைக்கு அலரை முடித்துக்கொள்ளும். இண்டை என்னும் மாலையையும் அருக்கத்தாரையும் மருமத்தில் அணிந்தவர்; அருக்கம் - எருக்கமலர்; மருமம் - மார்பு. பாசவருக்கத்தார் - சுற்றங்களின் தொகுதியை யுடையவர்.

65. கிளிகூடத்தமிழ் தீட்டும் - கிளி மிகுதியாகத் தமிழை எழுதும். கூடத்து அமிழ்து ஈட்டும் - வீட்டின் உறுப்பாகிய கூடத்தில் உணவு வகை களைச் சேர்த்து வைக்கும். ஆடுகின்ற அரவமாகிய கண்டிகையை அணிந்த; மெய்ச்சுந்தரத்தார் - திருமேனியழகர்; கண்டிகை - ஒரு வகைக் கழுத்தணி. காபாலக் கூத்தாடலை. சண்டிகை - காளி. மெய்ச்சும் தரத்தார் - வியக்கும் தகுதியையுடையவர்.

66. சிகரி - மலையுச்சியிலுள்ள; தேனுறு கொன்சிகரம் - தேனுற்றின் பெருமையையுடைய துளி; சீகரம், குறுகி நின்றது; கோபுரம் சேர் - கோவுலகத்தைச் சேர்கின்ற. கோலோகம் என்று ஓர் உலகமுண்டு. இதன் இயல்பு சிவதருமோத்தரத்துள்ள கோபுர இயலால் அறியப்படும். ஆலயம் சிகரத்தையும் கோபுரத்தையும் சேர்கின்ற; சிகரம் - விமானம். முன் சிகரம் தந்துள அஞ்சு அக்கரத்தார் - முன்னே சிகரத்தைப் பெற்றுள்ள சிவாயநம என்னும் மந்திரத்தையுடையவர். தம் துளவம் சக்கரத்தார் - தமக்குடைய துளவத்தையும் சக்கரத்தையுமுடைய திருமாலாக இத்தலத்திலுள்ளவர். தந்து உள அஞ்

67. ஆணை நெறியா லசுத்தரையுஞ் சுத்தரையும்
கோணை யறத்திருத்துங் குற்றாலம்—சாணையுறக்
கையனுக்கச் சந்துரைத்தார் காவலனார் நாவலூர்
மெய்யனுக்கச் சந்துரைத்தார் வீடு.

68. காடேறிக் கால்பரந்துங் கால்வாவி நீர்மிகுந்தும்
கோடேறித் தண்டலையூர் குற்றாலம்—ஏடேற
ஆற்றுதகத் தேற்றினா ராறலையு மென்கலக்கம்
தேற்றுதகத் தேற்றினார் சேர்பு.

69. மாறினர்பாற் பாடினர்க்கும் வந்தருவி யாடினர்க்கும்
கூறினற்பா வந்தடுக்குங் குற்றாலம்—தேறினர்பால்
யாண்டும் பரவெளியா ரெல்லையண்ட மூடுருவித்
தாண்டும் பரவெளியார் சார்பு.

சம் காத்தார் - நூல்களில் சொல்லப்படுகின்ற அன்னக்கொடியைக் கையில் தாங்கிய பிரமதேவராக உள்ளவர்.

67. ஆணை நெறியால் - ஆஞ்ஞை வழியால்; அசுத்தரை: கோணை அறத்திருத்தும் - வழி தப்பி நடத்தல் அறும்படி திருந்தச்செய்யும்; கோணை: ஐ, சாரியை. சுத்தரை: கோள் நை அறத்து இருத்தும் - குற்றங்கள் நைதற்குக் காரணமான அறத்தில் நிலைபெறச்செய்யும். சாணை உற - சாணைக்கல்லில் மிக; கை அனுக்க சந்து உரைத்தார் - கை வருந்தச் சந்தனத்தை அரைத்த மூர்த்தி நாயனாருடைய; அனுக்க: வலித்தல் விகாரம். நாவலூர் மெய்யனுக்கு - சுந்தரமூர்த்தி நாயனாருக்கு; அ சந்து உரைத்தார் - அந்தத் தூது கூறுவதற்குச் சென்றவர்; அ: உலகறி சுட்டு.

68. காடு ஏறி - காடுகளில் ஏறி; கால் பரந்து - காற்றானது பரவிச் சென்று; கோடு ஏறி தண்டலை ஊர் - மலைகளில் ஏறிச் சோலைகளில் மெல்லச் செல்லும். வாவி நீரானது: கோடு ஏறி - கரையில் ஏறி; தண்டு அலை ஊர் - நீங்குகின்ற அலைகள் பரவப்பெற்ற. ஏடு — திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எழுதிய திருப்பாசுர ஏடு; ஆற்று உதகத்து - வையை ஆற்றுவெள்ளத்தில்; ஏற்றினார் - எதிர் ஏறச்செய்தவர். ஆறு அலையும் என் கலக்கம் - பொறிவழியே சென்று அலைகின்ற என் கலக்கத்தை; தேற்று தக தேற்றினார் - தேற்றாங்கொட்டை நீரைத் தெளிவிப்பதுபோலத் தெளிவித்தவர்; "மண்மயக்கந் தேற்றுவித்தான் மாற்றுதல்போ லாரியனா, லுண் மயக்கந் தேற்றுவித்தா னூர்" (திருவேங்கடமாலை, 4.)

69. மாறினர் பால் - கொடுக்காமல் முகம்மாறினவரிடத்தில்; பாடினர்க்கு: கூறு இனல் பா வந்து அடுக்கும் - கூறு கூறாகிய வசைக்கவிகள் வந்து பொருந்தும்; இன்னற்பா - வசைக்கவி. அருவியில் ஆடினர்க்கு: கூறின் - சொல்லின்; அல் பாவம் தடுக்கும் - அஞ்ஞானமாகிய இருளையும், பாவத்தையும் தடுக்கும். தேறினர் பால் - தம்மையே துணையென்று தெளிந்தவரிடத்

70. காவா லிருநிதியாற் கண்பலவால் வேள்விகளாற்
கோவாற் புரந்தரனுங் குற்ருலம்—மாவார்
வருக்கைமூ லத்தார் வழங்குபொக்க ணஞ்சேர்
திருக்கைமூ லத்தார் சிலம்பு.

71. அற்றவராய் வந்தோரு மாரமரு வந்தோரும்
கொற்றவரா கத்துடங்குங் குற்ருலம்—நற்றவராம்
மூவரிசைப் பாடலார் மும்முரச மண்டபத்துத்
தேவரிசைப் பாடலார் சேர்பு.

72. வாடாக் கலேபிரிந்த மானுநூல் கற்பவரும்
கோடா மதிக்கலேகூர் குற்ருலம்—தோடாடத்
தூக்குமிசைத் தாண்டவர் தொல்வினைதீர்த் தென்மனமும்
வாக்குமிசைத் தாண்டவர் வாழ்வு.

தில்; யாண்டும் பரவெளியார் - எவ்விடத்திலும் பரவப்படுகின்ற எளியர். தாண்டும் பரவெளியை உடையவர்.

70. கா - கற்பக தரு, சோலே. இருநிதி - சங்கநிதி பதுமநிதி என்னும் இரண்டு நிதிகள், பெரிய பொற்றிரள். கண் பலவால் - பல கண்களால், கருதப்படுகின்ற பலாமரத்தால். கோவால் - காமதேனுவால் அல்லது வச்சிராயுதத்தால், தலைமையால். புரந்தரன் - இந்திரன். மா ஆர் - பெருமை பொருந்திய. வருக்கை மூலத்தார் - பலாமரத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்; பலாவென்றது இங்கே குறும்பலாவாகிய இத்தல விருக்ஷத்தை; இது தனியே தேவாரப்பதிகம் பெற்றது. பொக்கணம் - திருநீற்றுப் பை; "சுத்திய பொக்கணத்து" (திருச்சிற்.) கைம்மூலம் - கையினடி; என்றது அக்குளே.

71. அற்றவராய் - வறியவராய்; கொற்றவராகத் துடங்கும் - அரசராகத் தொடங்கும்; தொடங்குமென்றது துடங்குமென வந்தது. ஆர் அமர் உவந்தோர் - அரிய போரை விரும்பினோர்; கொல் தவர் ஆகத்து உடங்கும் - கொல்லுகின்ற வில் உடம்பில் ஒன்றுபட்டு நிற்கும். மூவர் - திருஞான சம்பந்தமூர்த்தி முதலிய மூவரது. இசை பாடலார் - இசையையுடைய தேவாரமாகிய திருப்பாட்டைப் பெற்றவர். மும்முரச மண்டபமென்று ஒரு மண்டபம் இத்தலத்து உண்டு. தேவர் இசைப்பு ஆடலார் - தேவர் புகழ் தலையுடைய நடனத்தைச் செய்பவர். இந்த ஆடல் வாசகியின்பொருட்டுச் செய்தது.

72. கலே பிரிந்த - ஆண்மானைப் பிரிந்த; மான் - பெண்மானனது; கோள் தாம் மதி - நவக்கிரக மண்டலத்தில் தாவிச்செல்லுகின்ற சந்திரனது; கலே கூர் - மானே விரும்புகின்ற. நூல்கற்பவருடைய; கோடா மதி - கோணுத

73. ஞாலமிசை யெப்பொருளு நன்னதியிற் சூல்வளையும்
கூல மறுகுதருங் குற்றாலம்—மாலுருவாய்
முன்பாலின் கண்படுத்தார் முக்கணர சாரடையிற்
றென்பாலின் கண்படுத்தார் சேர்பு.

74. கற்றமைந்தோர் சொல்லுங் கலகவிழி யார்குழலும்
குற்றமல ராதரிக்குங் குற்றாலம்—பற்றத்
திரமாலை யத்தன் றிரிகூடத் தெய்வப்
பாமாலை யத்தன் பதி.

75. வாவிக் கலைகுதித்தும் வானமுகி லைப்பழித்தும்
கூவற் கயமுழக்குங் குற்றாலம்—யாவர்க்கும்
தோமே களைகணர் தொல்லையண்ட கோடிகட்குத்
தாமே களைகணர் சார்பு.

வில்லாத புத்தியில்; கலை கூர் - வித்தை மிகப்பெற்ற. தோடு - காதணி. தூக்கும் - திருவடியைத் தூக்குதற்குரிய. மிசை தாண்டவர் - எல்லாக்கூத்திற்கும் மேலான பரமானந்த தாண்டவத்தையுடையவர். இசைத்து - ஒன்றுபடுத்தி. ஆண்டவர் - அடியேனை ஆட்கொண்டவர்.

73. எப்பொருள்களையும்; கூலமறுகு தரும் - கடைவீதியானது தருகின்ற. சூல்வளை - கர்ப்பத்தையுடைய சங்குகள்; கூலம் மறுகுதரும் - நீர்க்கரையில் வருத்தத்தால் சுழலாநிற்கும். ஆலின்கண் படுத்தார் - ஆலிலையின்மீது யோக நித்திரை செய்தவர்; இத்தலத்தில் திருமாலாக இருந்தமையைக் கூறியபடி. முக்கண் அரசார் - மூன்று கண்களையுடைய அரசராக உள்ளவர். அடையின் - தம்மைச் சரணாக அடைந்தால். தென்பாலின் கண் படுத்தார் - யமனுக்குரிய தென்றிசைக்கண்ணே போகச் செய்யாதவர். (பி-ம்.) 'முக்கணரசாய் வடவிற்.'

74. கற்றமைந்தோர் சொல்: குற்றம் அலராது அரிக்கும் - குற்றம் பரவாதபடி கெடுக்கும். கலகவிழியார் குழல் - மகளிருடைய கூந்தல்; குற்ற மலர் ஆதரிக்கும் - பறித்த பூக்களை அன்புசெய்யும்; விரும்பிச்சூடு மென்பது கருத்து. பற்று அத்திரம் மாலை அத்தன் - பிடித்தற்குரிய அம்பாகிய திருமாலைப் பாதிஉருவத்தில் உடையவர்; அத்திரம் - அம்பு; அத்தம் - பாதி. பரம ஆலயத்தன் - மேலான ஆலயத்தையுடையவரது.

75. வாவி - தாவி; கலை குதித்து - ஆண்மானானது துள்ளி; கூவல் கயம் உழக்கும் - கிணற்றையுடைய குளத்தைக் கலங்கச்செய்கின்ற. முகிலை பழித்து கூவல் கயம் முழக்கும் - மேகத்தைப் பழித்துக் கூவுதலையுடைய யானையானது முழக்கத்தைச் செய்யும்; பழித்து முழக்கும் என்க. தோம் களைகணர் - குற்றத்தைக் களைகின்ற திருவிழிகளையுடையார்; ஏ - அசைநிலை. களைகணர் - ஆதாரமாகவுள்ளவரது.

76. வாட்டானை வேந்து மணிப்பகலால் வாயசமும்
கோட்டானை யங்கடல்செய் குற்றுலம்—தோட்டானை
மாத்தூலத் தோலுரியார் மாமருங்கிற் சாத்துகலை
சாத்தூலத் தோலுரியார் சார்பு.

77. பானற் செழுந்தேனும் பல்சுருங்கை பாய்மதியும்
கூனத் தினமுகக்குங் குற்றுலம்—கானப்பேர்
பூவணங்கே தாரத்தார் புத்தூரார் வெற்பீன்ற
மாவணங்கே தாரத்தார் வாழ்வு.

78. மாவிளம் பூங்குயிற்கு மாதரார் பொன்முலைக்கும்
கூவிளங் காயிணையாங் குற்றுலம்—மீவிளம்பி
ஏறுபடைப் பாரிடத்தா ரேத்தியநா வஞ்செழுத்தின்
வீறுபடைப் பாரிடத்தார் வீடு.

---

76. வாள் தானை வேந்து - வாட்படையை உடைய அரசர்; கோட்டு ஆனை அம் கடல் செய் - கொம்பையுடைய ஆனைகளால் அழகிய கடலைச் செய்கின்ற; யானைப்படையைக் கடல் என்றுர். மணி பகலால் - மாணிக்கம் செய்யும் வெயிலால்; வாயசம் - காக்கையானது; கோட்டானை அங்கு அடல் செய் - கோட்டானென்னும் பறவையை அங்கே வருத்துகின்ற; கோட்டானுக்குப் பகலில் கண் தெரியாது; “பகல்வெல்லுங் கூகையைக் காக்கை” (திருக்குறள்.) தோள் தானை - தோளில் அணிந்துகொள்ளும் ஆடையாக; மா தூலம் தோல் உரியார் - மிகப் பருத்த உடம்பையுடைய யானையினது தோலை யுடையவர்; தோல் - யானை; உரி - தோல். யானைத்தோலைத் தோளாடையாக உடையவரென்றபடி. மருங்கில் சாத்துகலை - இடையில் அணிந்து கொள்ளும் கலையாக; சாத்தூலத் தோல் உரியார் - புலியினது தோலை உரியவர்; சாத்தூலம் - சார்த்தூலம்.

77. பானல் - நீலோற்பலத்திலுள்ள; தேன் - தேனை; கூன் நத தினம் முகக்கும் - உடல் வளைந்த சங்கினங்கள் முகந்து செல்லும். சுருங்கை பாய் மதி - மாளிகைச்சுவரிலுள்ள நுழைவாசலில் பாய்ந்து செல்லுகின்ற பூர்ண சந்திரன்; கூன தினம் உகக்கும் - கூனிச்செல்வதற்குத் தினந்தோறும் விரும்புகின்ற; சுருங்கையின் சிறுமையால் சந்திரன் அதிற் செல்வதற்கு இயலாமல் வளைந்து செல்லுதலை விரும்புவான். கானப்பேர் - காளையார்கோவில். பூவணம் - திருப்பூவணம். கேதாரம் - வடநாட்டுத் திருப்பதியுள் ஒன்று. வெற்பு ஈன்ற மா அணங்கே - பார்வதியையே; தாரத்தார் - தேவியாக உடையவரது.

78. மாமரம் இளம்பூங்குயிலுக்குக் கூவில் விளக்கும் ஆய்க்கு இணையாகும்; கூ - பூமி; ஆய் - தாய்; இணை - ஒப்பு. மாதரார் நகிற்கு: கூவிளங் காய் இணை ஆம் - இரண்டு வில்வக்காய் உவமையாகும்; இணை - இரண்டு. மீ விளம்பி - மேலாகச் சொல்லி; ஏறு படை பாரிடத்தார் - பகைமேற்

79. மேற்றேவர் வான்வழிக்கும் வீணையோர் பாடலுக்கும்
கோற்றேன் வழுக்கெடுக்குங் குற்ருலம்—மேற்றேறிற்
புள்வா கனத்துவந்தார் போதமுனிக் காகவிடை
வெள்வா கனத்துவந்தார் வீடு.

80. முத்துமரு விச்சிகர முட்டையென்று வான்குருகு
கொத்துமரு விச்சிகரக் குற்ருலம்—கொத்துமருப்
பூங்கொன்றைத் தாமத்தர் பூதலமெல் லாமிறைந்தம்
ஓங்கொன்றைத் தாமத்த ரூர்.

81. வெம்பாவக் குன்றிடிக்கும் வெற்பெனும்பே ரானைக்கும்
கொம்பாம் வடவருவிக் குற்ருலம்—தம்பால்
அடியவரை யாதரிப்பா ரல்லவரை மேனுட்
கடியவரை யாதரிப்பார் காப்பு.

செல்லுகின்ற பூதப் படையை உடையவர்; பாரிடம் - பூதம். வத்திய நா - தோத்திரம் செய்த நாவில்; அஞ்செழுத்தின் வீறு படைப்பார் இடத்தார் - பஞ்சாக்ஷரத்தின் பெருமையைப் பெற்றவரிடத்தில் இருப்பவர்.

79. தேவர் வான்வழிக்கு - தேவர் செல்லுகின்ற வானவீதியில்; கோல் தேன் வழுக்கு எடுக்கும் - கொம்புத்தேன் வழுக்குதலை உண்டாக்கும். வீணையுடையவரது பாடலுக்கு: கோல் தேன் - திரண்ட வண்டுகள்; வழு கெடுக்கும் - (சுருதியாக இருந்து) குற்றத்தை நீக்கும். மேல் - பண்டைக் காலத்தில்; புள் வாகு அனத்து உவந்தார் - கருடப்பறவையினிடத்தும் அழகையுடைய அன்னப்பறவையிடத்தும் உவப்புற்றவர்; பண்டைக்காலத்தில் திருமாலாகவும் பிரமதேவராகவும் இருந்தவரென்றபடி. போதமுனிக்காக - ஞானத்தையுடைய அகத்தியமுனிவர் பொருட்டு; விடையாகிய வெள்ளிய வாகனத்தில் வந்தாரது.

80. இச்செய்யுளிற் சிலேடை இல்லை.

சிகரம் முத்து மருவி - மலைச் சிகரத்தில் உள்ள முத்தை அடைந்து; வான் குருகு முட்டையென்று கொத்தும் - பெரிய பறவைகள் முட்டையென்று அவற்றைக் கொத்துகின்ற. அருவிச்சிகரம் - வடவருவியின் துளிகளையுடைய; சீகரமென்றது சிகரமென வந்தது. கொத்து - பூங்கொத்து. மரு - நறுமணம். ஓங்கு ஒன்று ஐ தாமத்தர் - அதற்குமேலே பொருந்திய அழகிய இடமாகிய மோக்ஷத்தையுடையவரது.

81. வெம்பாவமாகிய குன்றை இடித்தற்குரிய கொம்பு ஆகிய; கொம்பு-தண்டு. வெற்பாகிய பெரிய யானைக்குத் தந்தம்போன்ற அருவியையுடைய. வடவருவி - வடபால் விழும் அருவி. அந்த அருவிக்கு இடிக்கின்ற தண்டும் யானைத் தந்தமும் உவமைகள். அடியவரை ஆதரிப்பார். அல்லவரை - அடியாரல்லாதவரை. கடிய - நீக்குதற்பொருட்டு, வரையாது அரிப்பார் - ஓயாமல் வருத்துபவரது.

82. மண்டலங்க ணிக்குமெழின் மாவெயிலுந் தூவெயிலும்
குண்டலங்க டந்திலகு குற்றாலம்—அண்டருய்யக்
கண்டங்கார் பூத்திருந்தார் கற்பிலாக் கேதகையின்
கண்டங்கார் பூத்திருந்தார் காப்பு.

83. காட்டலையும் வாரணமுங் கானாறுந் தேனாறும்
கோட்டலைவா ரிப்புல்லுங் குற்றாலம்—நாட்டலையார்
உத்த மதிக்குடையா ரொண்ணின்ற வண்டமெல்லாம்
வைத்த மதிக்குடையார் வாழ்வு.

84. தேடுதவத் தெய்வத் திருமலைக்கு மாநதிக்கும்
கோடுதவு முத்தலைசேர் குற்றாலம்—ஏடுதவப்
பூணு மறைப்பொருளார் பொய்ப்பொருளாய்க் காண்பவர்கள்
காணு மறைப்பொருளார் காப்பு.

---

82. மண்டலம் கணிக்கும் எழில் - பூவுலகத்தினர் எண்ணிப் பார்க்கும் அழகையுடைய; மா எயில் - பெரிய மதிலானது; குண்டலம் கடந்து இலகு - ஆகாயத்தைக் கடந்து விளங்கும். தூ வெயில் - புனிதமான வெயிலை; குண்டலங்கள் தந்து இலகும்; குண்டலம் - காதணி. அண்டர் உய்ய - தேவர்கள் பிழைக்க. கண்டம் கார்பூத்து இருந்தார். கற்பிலா - அறிவில்லாத. கேதகையின் கண் தங்கு - தாழை மரத்தின் கண்ணே தங்கிய; ஆர் பூ திருந்தார் - நிறைந்த பூவிற்குப் பகைவராயுள்ளார். தாழம் பூவைச் சிவபெருமான் அணிவதில்லை யென்பது இங்கே அறியற்பாலது.

83. காடு அலையும் வாரணம் - காட்டில் திரியும் யானை; கோள் தலை வாரி புல்லும் - நவக்கிரகங்களைத் தலையிலேயுடைய கூடத்தை அடையும்; வாரி - யானைக்கூடம். கான் நாறும் - நறுமணம் வீசுகின்ற; தேனாறு - தேனருவி; என்றது சிவமது கங்கையை; கோடுகளையுடைய அலைவாரியைப் புல்லும் ; கோடு - சங்கு; அலைவாரி - கடல். நாள் தலையார் - தலைமையான நாளையுடையவர்; திருவாதிரை நட்சத்திரத்துக்கு உரியவர் ; நாள் - நட்சத்திரம். உத்தம திக்கு உடையார் - உத்தமமான திசையாகிய உடையாகப் பெற்றவர். அண்டம் - ஆகாயம்; உலகங்களுமாம். மதிக்குடையார் - மதிபோன்ற குடையை உடையவர்; எல்லா அண்டங்களுக்கும் தலைவரென்றபடி.

84. திருமலைக்கு - இத்தலத்துள்ள மலைக்கு; கோடு உதவும் முத் தலை சேர் - சிறுசிகரங்களை உதவுகின்ற மூன்று பெரிய சிகரங்கள் சேரப்பெற்ற; இதுபற்றி இத்தலத்தைச் சார்ந்த மலைக்குத் திரிகூடாசலமென்று ஒரு பெயருண்டு. மாநதிக்கு - பெரிய நதியின் கண்; கோடு உதவு முத்து அலை சேர் - சங்கால் தரப்பெற்ற முத்து அலையினிடத்தே சேர்கின்ற. ஏடு உதவப் பூணு மறை - ஏட்டில் உதவும்படி பூணாத வேதம்; எழுதாக்கிளவி யென்றபடி. காணு மறைப் பொருளார் - அறியாத இரகசியப் பொருளாக உள்ளவர்; "மேவுமொரு சிவலிங்கந் தேவரக சியமாய்" (குற். குறவஞ்சி.)

85. செப்புக் குவிமுலையார் சேல்விழியும் வானரமும்
கொப்புக் குழைதாவுங் குற்றலம்—துப்புத்
தருக்கமழு மானேற்றூர் தாளிரண்டின் முப்பூ
மருக்கமழு மானேற்றூர் வாழ்வு.

86. தோட்டிக் கயல்வயலிற் றன்னருவிக் கோட்டயலிற்
கோட்டிக் கயம்பாயுங் குற்றலம்—கூட்டிப்
பாசமைய முந்தடுப்பார் பண்டமரர் போற்றிப்
பாசமைய முந்தடுப்பார் பற்று.

87. வாம்புரவித் தேருமட வார்வதன பங்கயமும்
கூம்புபடா மாலைமலர் குற்றலம்—பாம்புபிறை
சூடலை யாற்றினர் தூங்கானை மாடத்தார்
கூடலை யாற்றினர் குன்று.

---

85. விழி, கொப்பை அணிந்த குழையில் தாவும்; கொப்பு - மேற் காதின் அணி; குழை - காது. வானரம் - குரங்கு; கொப்பு குழை - கிளை களில் உள்ள தளிரில்; கொப்புக்கு உழையெனப் பிரித்துப் பொருள்கொள்ள லும் பொருந்தும். துப்பு தரு கம் மழு மான் ஏற்றூர் - வன்மையைத் தரு கின்ற தலையையும் மழுவையும் மானையும் ஏற்றவர்; கம் என்றது பிரம கபாலத்தை. பூ: உலகத்தின் பொதுப் பெயராய் நின்றது. மரு கமழும் ஆனேற்றூர்; மரு - நறுமணம்; ஆனேறு - இடபவாகனம்.

86. தோட்டி கயல் - அழகையுடைய கயல் மீன்; வயலில் கோடு இக்கு அயம் பாயும் - வயலின்கண் வளைதலையுடைய கரும்பின் சாறு பாய் கின்ற. அருவிக் கோடு அயலில் - அருவிகளையுடைய சிகரங்களின் அயலில்; கோட்டி கயம் பாயும் - கூட்டமாகிய யானைகள் பாய்கின்ற. பாசமையமுங் கூட்டித் தடுப்பார் - பிறமதத்தாரை ஒருங்கு சேர்த்து அவரைத் தடுப்பவர். (பி-ம்.) 'கோட்டிப் பாசமையமும்'. பாசு அமைய - துதித்தல் பொருந்த. முந்து அடுப்பார் - அவர்களுக்கு முன்னே அடைபவர்.

87. தேர் - தேரில்; கூம்பு - கொடுஞ்சி; படாம் மாலை மலர் - சீலை களும் பூமாலைகளும் மலரப்பெற்ற; படாம் மாலை - சீலைகளாலாகிய மாலை யெனலுமாம். மடவார் - மகளிரது; வதனபங்கயம் - முகமாகிய தாமரை மலர்கள்; கூம்புபடா - குவியாமல்; மாலைமலர் - மாலைக்காலத்தில் மலரப் பெற்ற. பாம்பு பிறை - பாம்பையும் பிறையையும்; சூடலை ஆற்றினர் - சூடுதலைச் செய்தவர். தூங்கானைமாடம் - பெண்ணாகடம் என்னும் திருப்பதி யின்கண் உள்ள திருக்கோயில். கூடலையாறு - கூடலையாற்றூர் ; கூடல் ஐயாறு என்னும் இரண்டு தலங்களாகவும் கொள்ளலாகும்.

88. செண்டாடல் வீதிகளுஞ் சேயிழையார் மேடைகளும்
கொண்டாடுங் கந்துகம்பாய் குற்ருலம்—வண்டாடாச்
செண்பகவ னத்திஞன் செங்கைமழு வான்மலர்மேல்
ஒண்பகவ னத்திஞ ஞார்.

89. தெற்றம் பயில்கவிஞர் செய்யுளுமா ணர்விழியும்
குற்றம் பலகழிக்குங் குற்ருலம்—பற்றணியா
நஞ்சமர ராக்குவித்தார் நஞ்சமுண்டு வானவரை
விஞ்சமர ராக்குவித்தார் வீடு.

90. அம்புபடா வில்லு மளிபடாப் பூமலரும்
கொம்புபடாச் சோலையுஞ்சூழ் குற்ருலம்—வம்புபடாப்
போதுபடா மாத்தருவார் போர்வினைப டாமலருள்
மீதுபடா மாத்தருவார் வீடு.

---

88. செண்டாடல் வீதிகள் - செண்டாடுதலையுடைய வீதிகளில்; கொண்டாடும் கந்துகம் - எல்லாரும் பாராட்டும் குதிரைகள். மேடைகளில்: கொண்டு ஆடும் கந்துகம் - கையிற் கொண்டு ஆடுகின்ற பந்து. மலர்மேல் ஒண் பகவன் - பிரமன். நத்திஞன் - திருமால். பிரமதேவராகவும் திருமாலாகவும் எழுந்தருளியிருந்தவர் என்றபடி.

89. தெற்றம் - தெளிவு; தேற்றமென்பதன் குறுக்கல்; செய்யுள் குற்றம் பல கழிக்கும் - பாடல்கள் குற்றம் பலவற்றை நீக்கும். மாணர்விழி: குற்றுகின்ற அம்பின் அலகை அழிக்கும்; அலகு - அம்பின் முனை. பற்று அணியா - பற்றப்படும் ஆபரணமாக. நஞ்சு அமர் அரா குவித்தார்; அரா - பாம்பு. விஞ்ச அமரர் ஆக்குவித்தார்; அமரர் - மரணமற்றவராக.

90. இச்செய்யுளிற் சிலேடை இல்லை. அம்புபடா வில் - இந்திரவில். வடவருவியில் இந்திர வில் தோன்றுதலை இன்னும் காணலாகும்; "வாரி, இந்திர தனுவைச் சார்ந்தா னிந்திரன்." (குற்றலப். தேவர்கள் சிவத் துரோகம். 14.) அளிபடாப் பூமலர் - சண்பக மலர்; இத்தலத்திலுள்ள சண்பக வனத்தைக் குறிப்பிக்கின்றது. கொம்புபடாச் சோலை - மரக்கிளைகள் பட்டுப்போகாத சோலை; கொம்பு நீங்கிய சோலை - சாலை யெனலுமாம். வம்பு படா - நிலையின்மை உண்டாகாத. போதுபடா - அரும்புகள் உண்டாகாத. மா தருவார் - பெரிய குறும்பலாமரத்தையுடையவர். பூவாது காய்க்கும் மரங்களுள் பலா ஒன்று. அருள் மீது படாமா தருவார் - அருளை மேலே போர்த்துக்கொள்ளும் ஆடையாகத் தருபவர்; படாம் - மேற் போர்வை.

91. அத்தளவித் தாரநகை யார்குழலும் பேரெயிலும்
கொத்தளவித் தாரமருங் குற்றாலம்—முத்தளகத்
தாய்க்காடு நாடகத்தான் சாய்க்காடும் வெண்காடும்
வேய்க்காடு நாடகத்தான் வீடு.

92. கோட்டுவரை யாடிவருங் கூடமிசை மாடமிசைக்
கோட்டுவரை யாடிவருங் குற்றாலம்—கோட்டுவரை
வில்வளைக்கை மாதிடத்தார் வெண்கனகச் செங்கனகப்
பல்வளைக்கை மாதிடத்தார் பற்று.

93. மட்டார் குழலார் வனமுலையு நெற்பொலியும்
கொட்டாரம் பட்டடைசேர் குற்றாலம்—அட்டாங்க
யோகத் திருப்பா ருளத்திருப்பார் மங்கையொரு
பாகத் திருப்பார் பதி.

---

91. அ தள வித்து ஆரம் நகையார் - அழகிய மாதுளையின் வித்தையும் முத்தையும் போன்ற பல்லையுடைய மகளிர்; மாதுளை, மாதளமெனவும் வழங்கும். குழல் கொத்து அளவி தார் அமரும் - கூந்தல் பூங்கொத்துக்கள் கலந்து மாலை தங்கப்பெற்ற. எயில் கொத்தள வித்தாரம் மரும்; கொத்தளம் - மதிலின் ஒருறுப்பு; மரும் - மருவும். முத்து அளகம் தாய்க்கு - முத்தைப் போன்ற கூந்தலையுடைய காரைக்காலம்மையாருக்கு; முத்தளகமென்றது முதுமையைக் குறித்தபடி. ஆடும் நாடகத்தான் - ஆடும் தாண்டவத்தையுடையவர். இந்நாடகம் திருவாலங்காட்டில் நிகழ்ந்தது. வேய்க்காடு - திருநெல்வேலி, பாஞர். நாடு அகத்தான் - விரும்பிய திருவுள்ளத்தையுடையவர்.

92. கோட்டுவரை - கொம்பையுடைய மலைகளைப் போன்ற யானைகள்; ஆடிவருங்கூடமிசை - ஆடிவரும் சிகரங்களின்மேல் ; கோட்டுவரை ஆடு இவரும் - கொம்புகளையுடைய மலையாடு ஏறுகின்ற. மாடமிசை - மாடங்களின்மேல்; கோள் தவர் ஐ ஆடி வரும் - ஒன்பது கோள்களைச் சார்ந்துள்ள சிவந்த அழகிய உத்திராட நாளும் வரும்; ஆடி - உத்திராட நட்சத்திரம். கோள் தவரை ஆடி வரும் எனப்பிரித்து ஒன்பது கோள்களானவை மகளிர் பூசிக்கொள்வதற்கு வைத்த பத்துத் துவரைத் தாம் பூசிக்கொண்டு வாரா நிற்கும் எனலுமாம். கோட்டுவரை வில் வளைக்க மா திடத்தார் - சிகரங்களையுடைய மேருமலையை வில்லாக வளைத்தற்குரிய பெரிய திடத்தையுடையவர். வெண்கனகத்தாலும் செங்கனகத்தாலும் ஆகிய பல்வளைகளை அணிந்த கைகளையுடைய மாதை (உமாதேவியாரை) இடத்தேயுடையவர்.

93. நகில்களானவை கொட்டு ஆர் அம் பட்டு அடை சேர் - கொட்டுதல் ஆர்ந்த அழகிய பட்டும் தளிர்களும் சேரப்பெற்ற; தனத்தின்கண் தளிரை மகளிர் அணிந்துகொள்வது பண்டைக்காலத்து வழக்கம்; "பொரிப்பூம் புன்கினெழிற்றகை யொண்முறி, சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி"

94. வம்பலர்ப்பூஞ் சாரலிடை வந்துபணிந் தெஞ்ஞான்றும்
கும்ப முனிபரவுங் குற்ருலம்—அம்பணியும்
நித்தனு லாம்பதத்தா னீள்சரியை யாதியர்க்கு
வைத்தனு லாம்பதத்தான் வாழ்வு.

95. வேதண்ட மேலாறும் வேய்வளைத்த குஞ்சரமும்
கோதண்ட பாணிநிகர் குற்ருலம்—காதண்ட
வாங்கியபி ஞகத்தார் மாலையாய்க் கண்டிகையாய்
ஓங்கியபி ஞகத்தா ளூர்.

96. பாடியபூ வண்டினமும் பாவரங்கிற் கார்மயிலும்
கோடியரா கத்திறஞ்செய் குற்ருலம்—நீடியகை
வாகருணத் தானத்தன் வாய்மூர் மறைக்காடு
கோகருணத் தானத்தன் குன்று.

(நற். 9 : 5 - 6.) நெற்பொலி - நெல்லின் குவியல்; கொட்டாரம் பட்டடை சேர் - கொட்டாரத்திலும் பட்டடையிலும் சேரப்பெற்ற. அட்டாங்க யோகத்தில்; திருப்பு ஆர் உளத்து இருப்பார் - திருப்புதல் ஆர்ந்த மனத்தில் எழுந்தருளியிருப்பவர். ஒரு பாகத்து இருப்பார்.

94. வம்பு - நறுமணம். சாரலிடை: கும்பம் முனி பரவும் - மத்தகத்தையுடைய யானைக் கன்றுகள் பரவியிருக்கப்பெற்ற. கும்பமுனிபரவும் - அகத்தியமுனிவர் பரவுகின்ற. அம்பு அணியும் நித்தன் - கங்கை நீரைத் தம் திருமுடியின் கண்ணே அணியும் நிலைபெற்றவர். ஆல் ஆம் பதத்தான் - ஆலமரத்தை இடமாக உடையவர்; தக்ஷிணுமூர்த்தியின் திருக்கோலத்தை நினைந்து கூறியது. சரியை முதலிய நான்கையுமுடையார்க்கு; வைத்த நாலாம் பதத்தான் - முறையே வைத்துள்ள சாலோகம் முதலிய நான்கு பதவிகளை யுடையவர். திரிபு நோக்கித் தங்கரம் றன்னகரம் ஆயிற்று.

95. வேதண்டம் - மலை; ஆறு - ஆருனது; கோ து அண்ட பாணி நிகர் - காமதேனு உண்ணுகின்ற ஆகாய கங்கையைப் போன்றிருக்கும். வேய் வளைத்த குஞ்சரம் கோதண்ட பாணி நிகர் - மூங்கிலை வளைத்த யானை வில்லைக் கையில் தாங்கிய இராமபிரானை ஒக்கும்; மூங்கிலை உண்ணும் பொருட்டு யானை வளைத்தது. காது அண்ட வாங்கிய - காதளவும் நாணை இழுத்து வளைத்த. பிணுகம் - சிவபெருமானுடைய வில். மாலையாகவும் கண்டிகை யாகவும் ஒங்கிய; பின் நாகத்தார் - பின்னிய பாம்புகளை யுடையவர்.

96. வண்டினம் : கோடு இயம் ராகத்திறம் செய் - வளைந்த வீணையின் கண் எழும் பாணராது ராகத்தின் கூறுபாட்டைச் செய்யும். கார்மயில் கோடியர் ஆகத் திறம் செய் - மயிலானது கூத்தராது உடம்பின் ஆடலது திறத்தைச் செய்கின்ற. நீடிய கை வாகு அருணத்தான் அத்தன் - நீண்ட

97. காவற்செங் கோன்முறையுங் காட்டான் பயில்வரையும்
கோவர்த் தனமிசைக்குங் குற்றாலம்—யாவர்க்கும்
நம்பரத்த ரம்பரத்தர் நம்பரத்த ரம்பரத்தர்
நம்பரத்த ரம்பரத்தர் நாடு.

98. தேமளவு பூந்தடத்துஞ் செய்தவத்தோர் மூப்பிடத்தும்
கோமழவு மேய்ந்துவரும் குற்றாலம்—ஆமளவு
பண்டே யுவணத்தான் பங்கயத்தான் றேடுமுரு
வண்டே யுவணத்தான் வாழ்வு.

99. புஞ்சவரைச் சாரலினும் பூவிலனத் தாவியினும்
குஞ்சரங்கு லாவுதிருக் குற்றாலம்—செஞ்சரத்திற்
கண்ணையிடந் தப்பினர் கண்ணிடந்தப் பாரயன்போம்
விண்ணையிடந் தப்பினர் வீடு.

கையையும் அழகையும் உடைய செந்நிறமுடைய விநாயகருக்குத் தந்தை; அருணமென்பதை அரிணமென்பதன் விகாரமாகக் கொண்டு, கையில் அழகிய மானையுடையவர் எனினுமாம். மறைக்காடு - வேதாரணியம். கோகருணத் தானத்தன் - கோகருணம் என்னும் தலத்தையுடையவர்; தானம் - இடம்.

97. செங்கோன் முறை: கோ வர்த்தனம் இசைக்கும் - அரசாட்சியின் வளர்ச்சியைச் செய்யும்; வர்த்தனம் - வளர்ச்சி. காட்டான் - காட்டுப்பசு; பயில்வரை கோவர்த்தனம் இசைக்கும்- உலவுகின்றமலையானது கோவர்த் தனம் என்னும் மலையை ஒக்கும். இம்மலையிற் பசுக்கள் மிகுதி. யாவர்க் கும் நம்பர். அத்தர் - அத்தர் என்னுந் திருநாம முடையவர். அம் பரத்தர் - நீராகிய பாரத்தையுடையவர். நம் பரத்தர் - நம்முடைய பரவெளியாக உள்ளவர். அம்பர் அத்தர் - அம்பர் என்னுந்தலத்தில் மூர்த்தியாயுள்ளவர். நம்பு அரத்தர் - விரும்பத்தக்க செந்நிறத்தையுடையவர். அம்பரத்தர் - திசையாகிய ஆடையை உடைய்வர்.


98. தேமளவு பூந்தடத்து-தேன்கலந்த பூக்களையுடைய தடாகத்தில்; கோமழவு மேய்ந்துவரும் - பசுவின்கன்று அப்பூக்களை மேய்ந்துவரும். தவத் தோர் மூப்பிடத்தில்: கோமழவும் வய்ந்துவரும் - தலைமையை உடைய இளமையும் பொருந்திவரும்; தவத்தினுல் மூப்புத்தன்பத்தினின்றும் நீங்கி இளமை பெறுவாரென்றவாறு. ஆம் அளவு - இயன்றவரையில். பண்டே - முற்காலத்தில். உவணத்தானும் பங்கயத்தானும் தேடிய. உரு வண் தேயுவண்ணத்தான் - வடிவு வளவிய நெருப்பின் வண்ணமாக உள்ளவர்.

99. புஞ்சம் - கூட்டமான; வரைச்சாரலில் குஞ்சரம் குலாவு - மூங்கில்களையுடைய மலைச்சாரலில் யானைகள் சஞ்சரிக்கப்பெற்ற; மூங்கில் முளையை யானை உண்ணும். பூவில் அனத்து ஆவியில் - மலரில் அன்னப் பறவைகளையுடைய குளங்களில்; குஞ்சர் அங்கு உலாவும் - அவற்றின் குஞ்சு

100. வாழிக்கோ னீதியரு மன்னுமெழிற் காளையரும்
கோழிக்கோ னைப்பொருவுங் குற்றாலம்—காழித்
திருத்தனையன் பாடலார் சீராலங் காட்டிற்
கருத்தனையன் பாடலார் காப்பு.

கள் அங்கே உலாவுகின்ற; குஞ்சர்: போலி; சுரும்பு, சுரும்பர் என வந்தாற் போல்வது இது. குஞ்சு அரக்கு உலாவு எனப்பிரித்துக் குஞ்சுகள் அரக்காக உலாவுகின்ற என்று பொருள் கூறுதலும் ஆம். செஞ்சரத்திற் கண்ணை இடந்து அப்பினர் - செவ்விய அம்பினல் தம் கண்ணைத் தோண்டிக் காளத்திநாதர் திருக்கண்ணில் அப்பிய கண்ணப்ப நாயனர். கண் இடந் தப்பார் - கண்ணுகிய புலத்திற்குத் தப்பாதவர். விண்ணை இடம் தப்பினர் - விண்ணிடத்தைத் தப்பினவர்; ஐ: சாரியை.

100. கோல் நீதியர் - அரசர்; கோழிக் கோனைப் பொருவும்- முருகக்கடவுளை ஒக்கும். காளையர்: கோழ் இக்கோனைப் பொருவும் - கொழுவிய கரும்பை வில்லாகவுடைய மன்மதனை ஒக்கும். காழித் திருத்தனையன் - சம்பந்த மூர்த்தியினது. கருத்து அனை அன்பு ஆடலார்; அனை - காரைக்காலம்மையார்.



துற்றல அருவி

வேறு பிரபந்தங்கள்

கோவைகள்		ரூ.	அ.
திருவாவடுதுறைக் கோவை	...	0	10
பழமலைக் கோவை	...	0	10
திருவாரூர்க் கோவை	...	1	4
சிராமலைக் கோவை	...	0	12
கலைசைக் கோவை	...	0	12
உலாக்கள்			
திருக்காளத்திநாதருலா	...	0	5
திருப்பூவணநாதருலா	...	0	5
தேவையுலா	...	0	4
திருஇலஞ்சி முருகன் உலா	...	0	5
மதுரைச் சொக்கநாதருலா	...	0	6
திருக்கழுக்குன்றத்துலா	...	0	8
சங்கரலிங்க உலா	...	0	6
கடம்பர் கோயில் உலா	...	0	6
தூதுகள்			
தமிழ்விடு தூது	...	0	5
[illegible]விடு தூது	...	0	8
அழகர் கிள்ளைவிடு தூது	...	0	8
தென்றல்விடு தூது	...	0	4
மான்விடு தூது	...	0	6
[illegible]விடு தூது	...	0	2
பரணி முதலியன			
தக்கயாகப்பரணி	...	4	0
[illegible]ப்பரணி	...	0	12
[illegible] மும்மணிக்கோவை	...	0	5
மதுரை மும்மணிக்கோவை	...	0	5
திருமயிலைத் திரிபந்தாதி	...	0	5
திருமயிலை யமக அந்தாதி	...	0	6
சங்கரநயினார் கோயில் அந்தாதி	...	0	6
திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா	...	0	4
[illegible] வெண்பா	...	0	8
திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்	...	0	5
பழனிப் பிள்ளைத்தமிழ்	...	0	3
திருக்காளத்தி இட்டகாமிய மாலை	...	0	2
மகரநெடுங்குழைக்காதர் பாமாலை	...	0	4

கிடைக்குமிடம்:

தியாகராஜ விலாசம்,

திருவல்லிக்கேணி, சென்னை.